
செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-௫௮ தி. வ. ஆண்டு-௨0௧௫ சித்திரை பரல்-௯

மே 1984

உள்ளுறை

பக்கம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-ருஅ திரு. வ. ஆண்டு உ௦கரு, சித்திரை பரல்-கூ

மே 1984

தமிழ் வளர்ச்சிக்குத் தனிச் செயலர்

இவ்விந்தியத் துணைக் கண்டம் அயலவர் ஆட்சியில் சிக்குண்டு கிடந்த காலத்தில் நாட்டிற்கு ஏற்பட்ட பல தீமைகளுள் நம் தமிழன்னை தன் சீரும் சிறப்பும் இழந்து வளர்ச்சியற்று நின்ற நிலை குறிப்பிடத்தக்கதோர் அவல நிலையாகும்.

பின்னர் நாடு விடுதலை பெற்றபின் பேராயக் கட்சி ஆட்சி செய்தபோது தமிழ்த் தலைவர்களால் ஓரளவு இந்நிலை உணரப்பட்டு தமிழன்னை ஆட்சிப்பீடமேற அடிகோலபபெற்றது.

அடுத்து 1967இல் ஆட்சி முறையில் மாற்றம் ஏற்பட்டு, பேறிஞர் அண்ணு அவர்கள் தமிழக அரசின் முதல்வர் பொறுப் பினை ஏற்ற பின்னர் பலதுறைகளிலும் தமிழ் தனியாட்சி செலுத்தத் தலைப்பட்டது. அண்ணு அவாகளின் பெருமுயற்சியால் இரண்டா வது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் சீருஞ்சிறப்புமாக நடை பெற்றது. அதன் விளைவாகப் பல தமிழ் ஆக்கப பணிகள் துவக்கப் பெற்றன. தமிழ்மக்களிடையே புத்துணர்ச்சி தோன்றலாயிற்று. அதுகாறும் சென்னை மாகாணமெனப் பெயர்பெற்று இருந்த இத் தமிழ் நிலம், அண்ணு அவர்களால் ‘தமிழ நாடு’ என்னும் பெயரினைப் பெற்றுச் சிறப்புற்றது.

தமிழக அரசில் அவ்வப்போது தமிழ் வளர்ச்சிக்கென, தமிழ் வளர்ச்சித்துறை, தொல் பொருள் ஆய்வுத்துறை, மொழி பெயர்ப்புத் துறை, உலகத் தமிழ் ஆராய்சசி நிறுவனம், செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்டம், தமிழ்ப் பல்கலைக் கழகம் என்றின்ன பிற துறைகள் தொடங்கப்பெற்றுக் கல்வித் துறை பொதுத் துறை களின் கீழ் இயங்கி வந்தன.

இந் நிலையில் இத் துறைகளை ஒருங்கிணைத்து இத் துறைகட்கெனத் தனியாகச் செயலர் ஒருவரை அமர்த்தி இவற்றின் பணிகளைக் கவனிக்கச் செய்தலே சாலப் பயனுடைத்தாகும் எனக் கருதிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் முனைவர் ம. கோ. இராமச்சந்திரன் அவர்கள் ''தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை'' என்னும் பெயரில் தனித் துறை ஒன்றனை உருவாக்கியுள்ளார். இதற்காகத் தமிழக அரசினையும் சிறப்பாக முதல்வர் அவர்களையும் உளமாரப் பாராட்டுகிறோம்.

தமிழ் வளர்ச்சி என்பது பெயரளவில் மட்டும் நில்லாது செயல் முறையிலும் ஓங்கவேண்டும் எனக் கருதிய முதல்வர் அவர்கள், தக்கார் ஒருவரின் பொறுப்பில் அஃது இயங்க வேண்டும் எனக் கருதினார் போலும். அத் தக்கார் யார் என எண்ணிப் பார்த்தார். இத்தகு அரசுப் பணித்துறைகட்குச் செயலராக அமர்த்தப்படுவோர் இந்திய அரசுப் பணித்துறைத் தேர்வு பெற்றோராயிருத்தலே (இ. ஆ. ப-I. A. S.) மரபு. ஆனால் நம் புரட்சித் தலைவரோ அம் மரபினையும் மாற்றியமைக்கும் வகையில் ஒரு புரட்சி செய்துள்ளார்.

தமிழ் வளர்ச்சியில் நாட்ட முடையோரே இத் துறைக்கு ஏற்புடைய செயலராவார் என்பதை உளத்திற் கொண்டு, நீண்ட காலமாகத் தமிழுக்கே உழைத்துவரும் தமிழ்க் குடும்பம் ஒன்றின் தலைமகனார் ஒருவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதை எண்ணும் போது புரட்சித் தலைவரவர்களைப் பாராட்டாமல் இருக்க இயலாது.

யார் அப் பெருந்தகை?

அவர் தாம் உரைவேந்தர் ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்களின் தலைமகனார் முனைவர் ஒளவை து. நடராசன், எம்.ஏ., பிஎச்.டி அவர்களாவார். ஓர் இ. ஆ. ப. நிலைக்கு அவரை உயர்த்திச் செயலராக அமர்த்தியுள்ளமை வியந்து பாராட்டத்தக்கது.

இனி, இப்பெரு நிலைக்கு உயர்த்தப்பெற்றிருக்கும் பெருந்தகையார் பெற்றி எத்தகையதெனக் காண்போம். கல்வி கற்கும் இளமைப் போதிலேயே கன்னித் தமிழிடம் பற்றும் ஆர்வமும் கொண்டு, அதன் முதிர்ச்சியாகக் கல்லூரியில் பயிலுங்கால் பேரறிஞர் அண்ணா அவர்களைத் தமது பொது வாழ்வின் ஆசானாக ஏற்று அவர் தம் பேரியக்கத்தில் பேரீடுபாடு கொண்டு, பேச்சாற்றல் எழுத்தாற்றல்களில் சிறந்து மேடைத் தமிழை மேன்மையுறச் செய்தவர் திரு. ஒளவை நடராசன் அவர்களாவார்.

அன்பர் ஒளவை நடராசனார் பழகுதற்கு இனிய பண்பாளர். உளமுவந்து உரையாடுவதும், உரையாடலின் ஊடே நகைச் சுவை

யும் நற்றமிழ்ச் சுவையும் கலந்திடுதலும் இவர்தம் சிறப்பியல்புகளா கும். அதுமட்டுமன்று; பொதுப்பணிகளில் ஈடுபடும் பொது நோக்காளராகிய இவர் மதுரை தியாகராசர் கல்லூரியிலும், வள்ளல் மகாலிங்கனுர் தலைமையில் இயங்கும் இராமலிங்கா நற்பணி மன்றத் திலும் சிறப்புப் பணியாற்றிய பின் அரசுப் பணியினை ஏற்றவர். மொழி பெயர்ப்புத் துறையில் ஏறத்தாழப் பத்தாண்டுகள் பணியாற்றி யுள்ளார். மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு சிறப்புறப் பொது நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு இவர் ஆற்றிய தொண்டுகள் அளப்பில.

இங்ஙனம் பல்லாற்றானும் தகுதியும் திறமையும், செம்மையும் சீர்மையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஔவை அவர்களின் தலைமை யில் தமிழக அரசு வகுத்திடும் தமிழ் வளர்ச்சிப் பணிகள் புதுமையும் சிறப்பும் பெற்றுப் பொலிவுடன் வெற்றி நடை போடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

புதுப் பொறுப்பினை ஏற்றிருக்கும் அன்பர்க்கு எமது உளமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வதோடு,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப இவ்வரிய பொறுப்பினை ஒரு தக்கார்க்கு வழங்கிய தமிழக அரசினையும் அதன் தலைவர் முதல்வர் அவர்களையும் உளமாரப் பாராட்டுகிறோம்.

ஒன்றுபட்டு வாழ முயல்வீர்!

இனியேனும், இத் தென்றமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் தம் பழைய வழக்க ஒழுக்கங்களைப் பண்டைத் தமிழ் நூல்களின் உதவிகொண்டு ஆராய்ந்து தெளிந்து, தாம் சிக்கிக்கொண்ட ஆரிய வலையினின்றும் தம்மை விடு வித்துத், தம்மை உண்மையாக உயர்த்துதற்குரிய தமிழ் முறையால் தம்மை உயர்த்தி ஒருமித்து வாழ்வதிற் கருத் தாய் விரைந்து முயலல் வேண்டும்.

மறைமலையடிகளார்

(வேளாளர் நாகரிகம், பக். உக)

முறைப்பெயர் ஆய்வு

[கழக இலக்கியச் செம்மல்,
புலவர் இரா. இளங்குமரன்]

'முறைப்பெயரும் முறையீடும்' கடந்த செல்வி இதழிலே வெளிப்பட்டது. இதனை ஆர்வலர்வழி எதிர்பார்ப்பதும் முறையில்லை போலும் என்று எண்ணி, அமைந்த அளவில் எழுதுதல் ஆயினேம்.

தொல்காப்பியத்தில் நூன்மரபு, மொழிமரபு முதலியவை உண்டு. மரபியல் என்னும் பெயராலே ஓர் இயலும் உண்டு. மரபின் சிறப்பினை இவை தெளிவிக்கும்.

மரபு என்பது யாது? முன்னவர் எந்தச் சொல்லை எந்தப் பொருளில் வழங்கினார்களோ அந்தச் சொல்லை அந்தப் பொருளில் வழங்குவதே மரபாகும். ஆதலால் மரபு 'மயங்கா மரபு' என்றும்' 'மாறு மரபு' என்றும் சுட்டப்பெறும். மேலும், 'மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்' என்றும், 'மரபுநிலை திரியின் மான மில்லை' என்றும் சொல்லவும் படும்.

மொழி மரபுக்குரிய இவ்விலக்கணம் குடிமரபு அல்லது வழி மரபுக்கும் பொருந்துவதாம்.

மரபு என்னும் சொல்வழக்கு எவ்வாறு வந்தது? ஒரு மரத்தின் வித்து அதே மரத்தை மீண்டும் தோற்றுவிக்கின்றது. அதன் தன்மையும் அப்படியே அமைகின்றது. அதனால்தான் தொல்காப்பியர் குறித்த புளியும் மாவும் அவர் சொல்லிய சுவையை நாம் இன்றும் சுவைத்து அறியுமாறும், அப்பெயர்ப் பொருத்தத்தை உணருமாறும் வாய்க்கின்றனவாம். நாளும் பொழுதும் அவை மாறும் இயல்புடையவையாயின் அவர் சொல்லியவை. நமக்குப் பொருந்தாமலே போயிருக்கும். 'கோடு வாழ் குரங்கு', 'மூவரி அணில்', 'மாயிருந் தூவி மயில்' என்றும் 'ஆல்வேல்' என்றும் அவர் சொல்லியவற்றை இன்றும் நாம் அப்படியே போற்ற முடிகின்றதாம்.

மாறு இயல்பினதாம் ஒன்றை, மரத்தைக் கொண்டு உவமை வகையால் சுட்டியதே 'மரபு' ஆயிற்றும். ஏனைச் செடி கொடி விலங்கு பறவைகளும் மரபு நிலை மாறுதவையே எனினும், ஒன்றை எடுத்துக்காட்டால் விளக்க முயல்வார் கொள்வனவற்றுள், நிலைத் திணைக்கே முன்னுரிமை தருதல் முறைமையாம். இயங்கு திணையோ,

நிலைத்திணையின் வழிப்பட்டதேயாம். ஆதலால் மரம் என்பதைக் கொண்டே 'மரபு' எடுத்துக்காட்டப்பட்டதாம்.

இனிக் 'கொடிவழி' எனவும் மரபு சொல்லப்படுவதுண்டு. அதுவும் நிலைத்திணையாதல் கருதுக. ஒரு கொடியின் வேர் ஓரிடத்து இருந்தாலும் அது கொடியாய்த் தளிர்த்துப் படர்ந்து ஓடி ஆங்காங்குக் கிளைவேர் ஊன்றிப் பூத்துக் காய்க்கும். ஆயினும் அதன் ஒரு கொடித்தன்மை மாருமை தெளிவாம். ஆதலால், கொடிவழி என்பதும் குடிவழி என்பதும் ஒன்ருய் அமைந்தன. மாந்தர் அனைவரும் ஒருகுலம்; அவருள் தமிழராவோர் ஓர் இனம்; அவருள் சேரர் சோழர் பாண்டியர் வேளிர் பல்லவர் கங்கர் எனப்பட்டோர் தனித் தனிக் குடியினர். சோழர் இருவர் போரில் எதிர்த்து நின்றபோது 'குடிப்பொருள் அன்று நும்செய்தி' என்று கூறும் புலவர் வாக்கும், 'பழங்குடி' என்பதற்குப் பரிமேலழகர் கூறும் உரைவிளக்கமும் 'குடி' என்பதை நன்கு விளக்கும். 'குலம் வேறு குடி வேறு' என்பதும் விளங்கும். குலம் பெரும் பிரிவுக்கும், குடி அதன் உட்பிரிவுக்கும் உரியது என்பதும் தெளிவாம். இதனைக் 'குலமும் ஒன்றே குடியும் ஒன்றே' எனவரும் கபிலர் அகவல் தெளிவிக்கும். இடைக் காலத்தே குடிப்பெருமையைக் குலப் பெருமையாகச் சுட்டினர். குலமுறை கிளத்து படலங்களும் வகுத்துப் பாடினர். நிற்க.

மரபு, கொடிவழி, குடிவழி, வழிவழி, வழிமுறை, தலைமுறை, பரம்பரை என்பனவெல்லாம் ஒரு பொருளனவாய் வழங்குவன. இவற்றுள் பரம்பரை என்னும் ஆட்சி பிற்காலத்ததாம். ஆனல் அதன் பொருளமைதி முற்பட்டதாம். 'பரம்' என்பது இறைவன்; 'பரை' என்பது இறைவி; இறைவன் இறைவி முதலாக வருவது 'பரம்பரை' என்பதாம். இக்காலத்துப் பலப்பல குடியினரும் தங்கள் குடி முதல்வனைத் தெய்வ நிலைக்கு ஏற்றிச் சொல்லுதல் அறியத் தக்கதாம். முன்பும் சேரர் செந்தீயையும், சோழர் செங்கதிரையும், பாண்டியர் வெண்டிங்களையும் தங்கள் குலமுதலாகக் கொண்டமையும் கருதத்தக்கதாம். அம்முறையில் முதுபழந்தலைவனும், முதுபழந் தலைவியும் சேயோன் என்றும், பழையோள் என்றும் சுட்டப்பெற்றனர். சேயோன் என்னும் முதுவன் பெயரே சிய்யான் என இந்நாளில் வழங்குகின்றதாம். சேயோன்' என்னும் தொல்பழமுதியன் பெயர், செந்நிறங்கரணியத்தால் தன்மைப் பெயராயும் வழங்கிற்ரும். சிவன் என்பதும் அரன் என்பதும் செந்தீவண்ணன், சிவந்தவன் என்னும் பொருளவேயாம், அவன் மனைவியாம் முதுமகள் பழையோள் என்று முந்து நூல்களில் சுட்டப்பெறுதல் 'பழையோள் கணவ, என்பதால் புலப்படும். சேய் என்பதற்கு மகன் எனப் பொருள் கண்ட புனைவு உலகே, சிவனுக்குச் சேயாகச் செவ்வேளைப் படைத்துக்

கொண்டதாம். பழையோளும் பாண்டியனைச் சேய் என்று கழக நூல்கள் குறித்தனவாம். முதுமுதல்வன் முதுமுதல்வி பெயர்கள் இவ்வாறு அமைந்தமுறையில் இருந்து 'பரம்பரை' ஆட்சி சொல்லப் படுகின்றது என்க.

''உட்கார்ந்து சாப்பிட்டாலும் ஒன்பது பரம்பரைக்கு வரும்'' என வழங்கும் பழமொழி ஒன்பது பரம்பரையைச் சுட்டும். அவை :

	ஆண்பால்	பெண்பால்
(1)	சேயோன்	பழையோள்
(2)	ஒட்டன்	ஒட்டி
(3)	பூட்டன்	பூட்டி
(4)	பாட்டன்	பாட்டி
(5)	தந்தை	தாய்
(6)	மகன்	மகள்
(7)	பேரன்	பேர்த்தி
(8)	கொள்ளுப்பேரன்	கொள்ளுப்பேர்த்தி
(9)	எள்ளுப்பேரன்	எள்ளுப்பேர்த்தி

இவ்வொன்பான் தலைமுறைப் பெயர்கள் இவ்வொழுங்கில் அமையினும் இக்கால வழக்கில், மாறியும் திரிந்தும் கிடத்தல் உலகியலை நோக்க நன்கு அறியப்பெறும்.

(தொடரும்)

மக்களாட்சி செழிக்கவேண்டுமானல்...?

உலகத்தில் மக்களாட்சி முறை செழித்து விளங்க வேண்டுமானல், பெரிய நாடு, பெரிய நகரம், பெரிய அமைப்பு ஆகியவை நல்லவை அல்ல. தேர்தல்களிலும் பெரிய தொகுதிகள் இந்த முறைக்கு உதவாதவை. சிறு சிறு கிராம ஆட்சிகளே மக்களாட்சிக்கு அடிப்படையானவை. எந்த அமைப்பும் அந்த அடிப் படையை ஒட்டியே நடைபெற வேண்டும். நகரங்களைப் பெருக விடக் கூடாது. மத்திய அரசாங்கத்தில் அதிகாரங்கள் குவியுமாறு செய்தல் கூடாது. நகரங்கள் பெருகவும் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவியவும் வழி வகுத்துவிட்டு மக்களாட்சி வாழ வேண்டும் என்று விரும்பினல், கொள் விதைத்துவிட்டு எள் எதிர்பார்ப்பது போல் ஆகும்.

முனைவர் மு. வரதராசனர்

சங்க நூல்களில் ஓமை

[பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)]

'இருங்கழி முதலை மேஎந்தோ லன்ன
கருங்கா லோமைக் காண்பின் பெருஞ்சினைக்
கடியுடை நனந்தலை யீன்றிளைப் பட்ட'' —அகம்-3

''முளிந்த வோமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி'' —அகம்-5

''என்றூழ் நின்ற புன்றலை வைப்பிற்
பருந்திளைப் படூஉம் பாறுதலை யோமை'' —அகம்-21

''வெருவரு கவலை யாங்க ணருள்வரக்
கருங்கா லோமை யேறி வெண்டலைப்
புருந்துபெடை பயிரும் பாழ்நாட் டாங்கட்'' —அகம்-117

''ஓமையம் பெருங்காட்டு வரூஉம் வம்பலர்க்
கேமம் செப்பு மென்றூழ் நீளிடை'' —அகம்-191

''நிழலி லோமை நீரி னீளிடை'' —அகம்-223

''சூர்முத லிருந்த வோமையம் புறவி
னீர்முள் வேலிப் புலவுநாறு முன்றில்'' —அகம்-297

''உவரெழு களரி ஓமையங் காட்டு
வெயில்வீற் றிருந்த வெம்பல் அருஞ்சுரம்''
—நற்றிணை-84

''அருவி யான்ற நீரில் நீளிடைக்
கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்
பெருங்களிறு தொலைச்சிய முடத்தாள் ஓமை
அருஞ்சுரம் செல்வோர்க் கல்குநிழல் ஆகும்
குன்ற வைப்பிற் கானம்'' —நற்றிணை-137

''சேயின் வரூஉம் மதவலி யாவுயர்ந்
தோமை நீடிய கானிடை அத்தம்'' —நற்றிணை-198

''உலவை ஓமை ஓங்குநிலை ஒடுங்கிச்
சிள்வீடு கறங்குஞ் சேய்நாட் டத்தம்'' —நற்றிணை-252

''பொருத யானைப் புண்தாள் ஏய்ப்பப்
பசிப்பிடி உதைத்த ஓமைச் செவ்வரை''
—நற்றிணை-279

''பணைத்தாள் ஓமைப் படுசினை பயந்த
பொருந்தாப் புகர்நிழல் இருந்தன மாக
நடுக்கஞ் செய்யாது நண்ணுவழித் தோன்றி
ஒடித்துமிசை கொண்ட ஓங்குமருப் பியானை''

—நற்றிணை-318

''இறந்தோர் மன்ற தாமே பிறங்குமலைப்
புல்லரை யோமை நீடிய
புலிவழங் கதர கானத் தானே'' —ஐங்குறுநூறு-313

''உலறுதலைப் பருந்தி னுளிவாய்ப் பேடை
அலறுதலை யோமை யங்கவட் டேறிப்
புலம்புகொள விளிக்கு நிலங்காய் கானத்து''

—ஐங்குறுநூறு-321

''கான யானை தோனயந் துண்ட
பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்க லுலவை யேறி யொய்யென''

—குறுந்தொகை-79

''உமணர் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்காடு''

—குறுந்தொகை-124

''அத்த வோமை யங்கவட் டிருந்த
இனந்தீர் பருந்தின் புலம்புகொ டெள்விளி''

—குறுந்தொகை 207

''எளிதென வுணர்ந்தனள் கொல்லோ முளிசினை
ஓமை குத்திய வுயர்கோட் டொருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவாஅன்''

—குறுந்தொகை-396

''பொரிபுற வோமைப் புகர்படு நீழல்
வரிநுதல் யானை பிடியோ டுறங்கு
மெரிமயங்கு கானஞ் செலவுரைப்ப நில்லா''

—ஐந்திணை எழுபது-37

''மண்ணெடுத் துண்ணு மண்ணல் யானை
வண்டேர்த் தொண்டையர் வழையம லடுக்கத்துக்
கன்றி லோரா விலங்கிய
புன்று ளோமைய சுரனிறந் தோரே''

—குறுந்தொகை-260

''புல்லிலை ஓமைய புலிவழங் கத்தம்'' —நற்றிணை-107

"அலறுதலை மராஅமு முலறுதலை ஓமையும்"
—சிலப்பதிகாரம்-காடுகாண் காதை-75

ஓமை மரத்தின் அடிமரத்துப் பட்டை முதலையின் மேல் தோல் போல இருப்பதாகவும் கரியதாகவும் இருக்குமென்றும் அகநானூற்றில் கூறப்பட்டுள்ளது. முதலையின் மேந்தோலன்ன என்று கூறிய உவமை மிகவும் சிறந்ததாகும். N. L Bor என்ற வனத்துறை அறிஞர் இவ்வகையாக நெடுக்கிலும் குறுக்கிலும் பொரிந்து காணப்படும் பட்டையை (Crocodile Skin bark) என்று தமது நூலில் கூறியுள்ளார். இதே உவமை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சங்க நூலில் பயன்படுத்தப்பட்டிருப்பது எண்ணி இன்புறத்தக்கது. (Bark dark brown and rather rough and ¼ inch thick). என்று இந்த மரத்தின் பட்டையைப்பற்றி அறிவியலில் கூறுவர். பொரிதாள் ஓமை என்றும் அழைக்கப்பட்டுள்ளது. நீடிய ஓமை, ஓங்கு நிலை ஓமை, நெடுஞ்சினை ஓமை என்று ஓமையின் நெடிய தன்மை கூறப்பட்டுள்ளது. ஓமை மரம் 100 அடி உயரம் வரை வளரும் என்று கூறுவர். இந்த மரமானது மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பச்சிலைகளுடன் (Evergreen) காணப்படுகின்றது. இந்த மரத்தைக் கடும் வெயில் காலத்தில் நீர் வறந்த சூழ்நிலையில் பெரும்பாலான சங்கப் பாடல்கள் கூறியுள்ளன. இந்த மரத்தின் சூழ்நிலையில் யானை சில பாடல்களில் கூறப்பட்டுள்ளது. 'புல்லரை யோமை நீடிய பிறங்குமலை புலிவழங் கதர கானத் தானே' என்று ஐங்குறுநூறும் (316); 'புல்லிலை ஓமைய புலிவழங் கத்தம்' என்று குறுந்தொகையும் (107) கூறுவதால் புலி காணப்படும் சூழ்நிலையான அடர்ந்த காடுகளில் ஓமைமரம் காணப்படும் என்பது தெரிகின்றது. ஆனால் சங்க நூல்களில் பல பாடல்களில் கடுவெயிலில் நீரற்ற வறண்ட சூழ்நிலையில் காணப்பட்ட காடுகளில் ஓமை மரம் கூறப்பட்டுள்ளது. ஓமையின் உள்மரம் எப்படியிருக்குமென்றும் ஒரு சங்கப்பாடல் கூறியுள்ளது. சண்டையிட்ட யானையின் புண்ணுடைய தாள் போன்று ஓமையின் செவ்வரை அதாவது சிவந்த அடிமரம் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. (The wood is dark red or reddish brown and contains a resin which is similar to the valuable capaiba balsam. N. L. Bor in the manual of Forest Botany) இந்த மரம் கருஞ்சிவப்பாக இருப்பதாகவும் இந்த மரத்தில் ஒருவகைத் தைலம் இருப்பதாகவும் வனத்துறை அறிஞர் கூறியுள்ளதைக் காணலாம். இந்த மரத்தை உறுதியாகக் கண்டுகொள்ள ஒரு செய்தி உதவுகின்றது. இதன் அடிமரத்தைத் துளைத்தால் நான்கிலிருந்து பதினாறு காலன் வரை ஒருவகை தைலத்தைத் தரும் என்று வனத்துறையினர் கண்டுள்ளனர். (When the heart wood of Kingiodendron Pinnata is tapped a tree

yields 4 - 16 gallons of oleo-resin and can be tapped again after a decade—Indian Forester November 1928) இந்தத் தைல எண்ணெயை யானை அடிமரத்தை குத்திக்கொண்டதாகக் குறுந்தொகைப் பாடலிலிருந்து (396) அறிந்துகொள்ளலாம். "ஓமை குத்திய உயர்கோட் டொருத்தல்" என்று கூறியிருப்பதால் யானை குத்தியது இந்தத் தைல எண்ணெயை உண்ணவேயாகும் என்று கருத வேண்டியுள்ளது. இவ்வாறு தைல எண்ணெய் தரும் மரம் Kingiodendron Pinnata என்ற மரமாகும். இதுவே ஓமையாகும். இதுபோன்றே ஆச்சாவின் அடிமரத்தைக் குத்தித் தைல எண்ணெயை உட்கொள்வதைக் குறுந்தொகை 255ஆம் பாடல் கூறுவதை ஏற்கெனவே செல்வியில் விளக்கியுள்ளேன். யானை ஓமையின் கிளைகளை ஒடித்து உண்பதும் ஓமை மரத்தைச் சாய்த்து உண்பதும் கூறப்பட்டுள்ளது.

ஓமையும் ஆச்சாவும் நெருங்கிய ஒரே இனத்தைச் சேர்ந்த மரங்களாகும். ஓமையைச் சென்னைப் பல்கலைக்கழக அகராதி 'உவா' என்று தவறுதலாகக் கூறியுள்ளது. உவா உகாவாக இருந்தால் அது வேறு மரமாகும். உகாயைப் பற்றிச் செல்வியில் எழுதியுள்ளேன். இது போன்றே யா என்று சங்க நூல்களில் அழைக்கப்படும் ஆச்சாவை Shorea Robusta என்று சென்னைப் பல்கலைக் கழக அகராதி கூறுகின்றது. இது மிகவும் தவறு. Shorea Robusta தென்னிந்தியாவில் இயற்கையில் காணமுடியாத மரமாகும். வடநாட்டில் காணப்படும் இம்மரத்தைச் சாலமரமென்று அழைப்பர். ஓமையைத் தற்காலத்தில் மடையன் சாம்பிராணி என்றழைப்பர். இதன் தைலத்திலிருந்து ஒருவகை சாம்பிராணி செய்வர். சிலவிடங்களில் கொளவு என்றுமழைப்பர். இதை ஆங்கிலத்தில் Malabar Mahagony என்றழைப்பர்.

ஆங்கில மேற்கோள் நூல்கள் :

1. Manual of Indian Forest Botany - N. L. Bor.
2. Flora of the Presidency of Madras—T. S. Gandhi.

———

அரசுக்குக் கொற்கைத் தமிழ் மன்றம் வேண்டுகோள்

தூத்துக்குடியினைத் தனி மாவட்டமாக்கிட விரும்பும் தமிழக அரசுக்குக் கொற்கைத் தமிழ் மன்றம் சில வேண்டுகோள்களை விடுத்துள்ளது. அவற்றுள் தலையாயது, தூத்துக்குடியை வரலாற்றுக் கண்கொண்டு நோக்கி, அதன் பழம்பெருமை நிலைத்திடுமாறு செய்ய கொற்கை மாவட்டம் எனப் பெயரிடுதலே சாலச் சிறப்புடையதாகும் என்பதாகும்.

ஆட்சிமொழிச் சிந்தனைகள்

[தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை
மாக்கவி பாரதி நகர், சென்னை-600039.]

VILLAGE PANCHAYAT

திருத்தணியப்பன், திருத்தணித் திருக்குமரன், ஆம், திருத்தணி வழக்கறிஞர் உயர்திரு. D. S. ஏகாம்பரம் அவர்கள் நுட்பமான செய்திகளைத் திட்பமாக எடுத்துரைக்கும் திறனுடையவர். ஆய்ந் தாய்ந்து பார்த்து அரும்பெரும் உண்மைகளை அகழ்ந்தெடுக்கும் நுண்மாண் நுழைபுலமுடையவர். அவர் ஓர் அரிய வினாவைத் தொடுத்தார். Village Panchayat என்பதற்கான தமிழ் மொழி பெயர்ப்பு என்ன என்பதுதான் அந்த வினாவாகும். இந்தத் தொட ருக்கு ஏற்ற மொழிபெயர்ப்பைக் கண்டுபிடிப்பதென்றால், தலைகீழாக நின்றாலும் தவிப்புதான் நேரும் என்று தெரிவிப்பதைப் போல, வினாவை மேல்கீழாக மாற்றி Panchayat Village என்பதற்கும் மொழிபெயர்ப்பு தேவை என்று கூறிமுடித்தார்!

Panchayat குறித்தும் Town Panchayat குறித்தும் யாவரும் ஏற்கெனவே சிந்தனை செய்துள்ளனர். Panchayat என்பதை "ஊராட்சி" என்றும் Town Panchayat என்பதைப் "பேரூராட்சி" என்றும் நல்ல முறையில் நாம் மொழிபெயர்த்துள்ளோம். ஆயினும் Village Panchayat என்பது குறித்து எவரும் எள்ளளவும் சிந்தனை செய்துள்ளதாகத் தெரியவில்லை!

சிறப்பு அகராதிகளைப் புரட்டிப் பார்த்தால், Village என்னும் சொல்லுடன் தொடங்கும் தொடர்கள் அணி அணியாக வலம் வரு கின்றன! Village accounts என்பதிலிருந்து புறப்பட்டு Village Road முழுவதும் பயணம் செய்து பார்த்தாலும் Village Panchayat என்னும் தொடர் இடையில் எங்குமே அகப்படவில்லை!

கடினமான ஓர் ஆங்கிலத் தொடரை நாம் எதிர்ப்படும்போது, எப்பாடுபட்டேனும் அதற்கொரு இனிய மொழிபெயர்ப்பைக் கண்டு பிடித்து அமைப்பது ஒரு முறை. இன்னொரு முறை என்னவென்றால், இயலாதெனத் தோன்றும் இன்னல்மிகு நேரங்களில், அந்தத் தொடரைக் கண்டுங் காணாதது போல, தெரிந்தும் தெரியாதது போல, விட்டுவிட்டு விலகிச் சென்றுவிடுவது! இந்த முறையை ஒட்டியே Village Panchayat-ம் அகராதியை விட்டு அப்பாற் சென்றுவிட்டதென ஐயுற இடமேற்படுகிறது!

"ஊர்" என்னும் சொல்லுக்கு உரிய ஆங்கில மொழிபெயர்ப்பாக Village, Town, City என்னும் மூன்று சொற்களுமே கொடுக்கப் பெற்றுள்ளன. தமிழ்ப் பேரகராதி தரும் செய்தியாகும் இது.

"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்"

என்று பாடுகின்ருர் பைந்தமிழ்ப் பாட்டி ஒளவையார்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"

என்று வினவுகின்ருர் வான்புகழ் வள்ளுவர்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்று முழக்கம் செய்கிருர் கணியன் பூங்குன்றனர். அரசூர் என்பது சிறிய ஊர். தஞ்சாவூர் என்பது ஒரு பெரிய ஊர் கோயமுத்தூர் என்பது அதைவிடப் பெரிய ஊர். இன்றைய முறையிலே இவற்றைப் பாகுபாடு செய்தால், இவை முறையே Village, Town, City என்று அமைந்துவிடும். இவ்வாறு "ஊர்" என்னும் சொல் எல்லா ஊர்களையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகும் என்பதை இனிது உணரலாம்.

ஊராட்சித் துறைக்குத் தொடர்புடைய ஒருசில நண்பர்களை அணுகி அளவளாவி ஆராய்ந்தேன். அவர்கள் அனைவரும் ஒருமுகமாக Village Panchayat என்ருலும் "ஊராட்சி"தான் என்று தெரிவித்துவிட்டனர். அதன் பிறகு நண்பர் ஏகாம்பரம் அவர்களின் திருமுகம் நோக்கினேன். அவர் Village Panchayat என்பதற்குச் சட்டத்தில் உள்ள விளக்கத்தைப் படித்துக் காட்டி, மொழிபெயர்ப்பு கட்டாயம் தேவை என்று மொழிந்தார்.

"பேரூராட்சி" (Town Panchayat) குறித்துப் பெருமையாகப் பேசும் நமக்கு Village Panchayat விளங்காமல் போய்விடுமா ?

பஞ்சாயத்துச் சட்டத்தில், Panchayat, Village Panchayat, Panchayat Village ஆகிய அனைத்திற்கும் விளக்கங்கள் எஞ்சாமல் கொடுக்கப்பெற்றுள்ளன.

Village என்பதற்குக் "கிராமம்" என்பது பழைய மொழிபெயர்ப்பு. அதன்பின்னர் பழகிப்போன அரிய மொழிபெயர்ப்பு "சிற்றூர்" என்பதாகும். அதனை ஈண்டு வரவழைத்து, அதனுடன் உறவாடுவோம் !

சொல்லிப் பார்த்தால் சிறிய சிக்கல் ஒன்று ஏற்படும். Village Panchayat என்பதற்குச் "சிற்றூர் ஊராட்சி" என்று சொல்லலாமா? இத்தகைய சிக்கல்களை நாம் ஏற்கெனவே எளிதில் தீர்த்துவைத்துள்ளோம். எடுத்துக்காட்டுகள் ஏராளம் இருக்கின்றன. இரண்டினை மட்டும் ஈண்டுத் தர விழைகின்றேன். ஏனென்றால் "இரண்டிற்கு மேல் எப்போதும் வேண்டாம்" என்னும் புதுமொழியை நாம் நன்கு புரிந்துவைத்துள்ளோம்.

Tamil Nadu Government Gazette, Court of Criminal Justice என்னும் தொடர்களைச் சிந்தாமல் சிதறாமல் மொழிபெயர்த்தால், "தமிழ்நாடு அரசு அரசிதழ்" என்றும் "குற்றவியல் நீதி நீதி மன்றம்" என்றுந்தானே அமையும். இவற்றை நாம் "தமிழ்நாடு அரசிதழ்" என்றும் "குற்றவியல் நீதிமன்றம்" என்றும் குறுக்கிச் சுருக்கிச் சிறப்புற அமைத்துள்ளோம். "என்னத்தைச் சொல்வேன் இனி" என்று ஈற்றடி அமைத்துக்கொடுத்தார் ஒரு புலவர். அந்த நிலையை நாமும் அடைந்துவிட்டோம்.

"கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான்
மனக்கவலைகள் மறைந்ததம்மா"

என்று இப்போது பாடலாம்.

Village Panchayat = சிற்றூராட்சி

Panchayat Village = ஊராட்சிச் சிற்றூர்

ஒரு விளக்கம்

ஒரு செய்தி; செய்தியன்று, 'விளக்கம்' : "தோற்றோரியல் கல்லூரி" என்னும் தொடர் தோன்றிய கதை அது. சென்னை, இராயப்பேட்டை, மௌபரீசுச் சாலையில், சில ஆண்டுகளுக்கு முன்பு வளமனை (Banglow) ஒன்றின் வாயிலில், ஒரு பெரிய பெயர்ப் பலகையைப் பார்த்தேன். "டுடோரியல் கல்லூரி" என்பதைக் கண்டதும், எனக்குச் சிரிப்பு உந்திக்கொண்டு வந்தது. ஆங்கிலச் சொல்லின் ஓசையை அப்படியே தமிழ் எழுத்துக்களைக் கொண்டு ஏன், பாவம்! எழுத வேண்டும்; அச் சொல்லைத் தமிழில் அதே ஓசை தரும் 'தோற்றோரியல்' என்று எழுதியிருக்கலாமே, பொருளும் இருக்குமே, என்று எனக்குத் திடும் எனத் தோன்றிற்று. நகைச்சுவைக்காக இந்தச் சொல்லைப் பயன்படுத்தலாம் என்பதே என் கருத்து. "தனிப்பயிற்சிக் கல்லூரி" என்பதே பொறுப்பான மொழி பெயர்ப்பாகும் என்று அப்போதே நான் எண்ணினேன்.'

— ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார்

அறுப்புக்கோட்டைப் பட்டு வரும்

[க. சி. கமலையா]

கணவனை இழந்தார்க்குக் காட்டுவது ஒன்றுமில்லை. கொடி படர ஒரு கொம்பு தேவைப்படுகிறது. அதே போலத்தான் பெண்ணின் வாழ்க்கையும். வீட்டுக்குரியவள் பெண். எனவே தான் மனைவி எனப்பட்டாள். பெண்ணுக்கு இருவிதக் கடமைகளுண்டு—ஒன்று மனைவியாக மற்றொன்று தாயாக. கணவனும் மனைவியும் ஒன்றிணைந்து இருகூறுகளாகச் செயற்படுகின்றன. மாண்புடைய மனைவி வாய்ப்பாளாயின், ஒருவனுக்கு இல்லாதது யாது? ஆகவே வாழ்க்கைத் துணையானாள். கணவன்—மனைவி சேர்க்கையைச சாவு ஒன்றுதான் பிரிக்கமுடியும்.

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'' (குறள், 55)

மனைவிக்கு எல்லாமாவான் கணவன். அவன் ஒருவனையே தன்னுடைய ஒரே ஆதரவாகக் கருதும் மனைவி மக்கட்பேறு பெற்றால் மனைமாட்சி மேலும் பொலிவுறுகிறது.

''மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன் மக்கட் பேறு'' (குறள், 69)

சீரான இல்வாழ்க்கை என்ற தோணியைச் சாவு என்னும் புயல் ஆதரவின்மை என்ற கடலில் மூழ்கடித்துவிடுகிறது. ஈன்று புறந்தருதல் தாயின் கடன். தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய் ஈன்றபொழுதினும் மகிழ்வடைகின்றாள். எனினும் மகனைச் சான்றோனாக்குவது தந்தைக்குக் கடன். தான் வாழவும் தன் மக்கள் நலன்பெறவும் தன் கணவனைக் காட்டிலும் உற்றார் யார்?

முடிசூடிய மன்னனாயினும் முற்றுந்துறந்த முனிவனாயினும் சாவிற்கு அடிபணியத்தான் வேண்டும். எவரும் தப்புவதற்கில்லை. தோற்றம் அழிவில் முடிகிறது. தோன்றியதனைத்தும் மறையும். நின்று நிலைத்தல் இயற்கைக்குப் புறம்பானது. மரத்தையும் மனிதனையும் ஒப்பிடலாம். இலையிலிருந்து பழம்வரை அனைத்தும் உதிர்கின்றன. ஒரு கதை சொல்வதுண்டு. ஒரு காலத்தில் சாவா மருந்துண்டு எல்லோரும் வாழ்ந்தனர். மக்கட் தொகையைக் குறைக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுக் கூற்றுவன் உதவி நாடப்

பட்டது. முதியவர்களை மட்டும் கொண்டுசென்றால் போதுமானது என்று சொல்லப்பட்டபொழுது இயற்கையின் படைப்பில் இலை, மலர், பிஞ்சு, காய், பழம் என்ற எல்லாம் உதிரும்பொழுது மனித னுக்கு மட்டும் ஏன் விதிவிலக்கு என்ற எதிர்க்கேள்வி எழுந்தது. மனிதனும் இயற்கையுடன் ஒன்றினான். இளமை பூத்துக் குலுங்கிக் கொழிக்கும் எழிற் பிழம்பாய் விளங்கும் மங்கை நல்லாளின் துணைவன் என்று சாவு ஒதுங்கிச் செல்கிறதா? இல்லையே. வேட்டை நாயைப்போலச் சாவு உயிரினங்களைத் துரத்திச் செல்கிறது. மனைவி யைக் கொஞ்சிக் கொஞ்சிக் குலாவிய வாலிப மிடுக்குள்ள இளைஞனைக் குறிவைத்துக் கொண்டுபோய்விடுகிறது சாவு. கணவ னுடன் இன்ப உலகில் ஓடியாடித்திரிந்து, கிளித்தட்டு மறித்துச், சடுகுடு ஆடிய பொற்பாவை துயரத்திலிருந்து விடுபட்டுச் சிலவேளை களில் கணவனுடன் கழித்த நனவைக் கனவாய்க் காண்கிறாள்.

''ஆலஞ்சருகரித்து அடிக்கிணத்து நீர்கோதி
ஆக்குஞ் சிறுவீடு அனல்போகும் மேல்வீடுபாதகத்தி
ஆக்கி வெளியே வந்தால் அங்கத்துநீர்வடியும்.

எனக்கு வாச்ச அதிகாரி இங்கிருந்தா
அங்கத்து நீர் துடைக்க அருப்புக்கோட்டைப் பட்டு வரும்
அதிகாரி இல்லாம அருப்புக்கோட்டைப் பட்டுமில்லை

புங்கஞ் சருகரித்துப் புதுக்கிணத்து நீர்கோதி
பொங்குஞ் சிறுவீடு புகைபோகும் மேல்வீடுதான்
பொங்கி வெளியே வந்தா புருவத்துநீர்வடியும்.

எனக்கு வாச்ச புண்ணியரே இங்கிருந்தா
புருவத்துநீர் துடைக்கப் புதுக்கோட்டைப் பட்டுவரும்
புண்ணியனாரில்லாமல் புதுக்கோட்டைப் பட்டுமில்லை''

இவ் வொப்பாரிப் பாடல் நமக்கு வழங்கும் தகவல் எண்ணிப் பார்க்கத்தக்கது. பெண் இருக்கும் ஊரில் ஆலமரமும் புங்கமரமும் உள. மக்கள் தண்ணீருக்குக் கிணற்றை நம்பி வாழ்கின்றனர்; அதுவும் வெகு ஆழத்தில் உள்ளது. அங்கிருந்துதான் இறைக்க வேண்டும். அவள் வீடு 'காரை' வீடுதான். இல்லையேல் நெருப்புப் புகைபோகப் புகைக்கூண்டு எவ்வாறிருக்கமுடியும்? வீடு சிறிய தென்றாலும் மாடி இருக்கிறது போலும்! இல்லையேல் 'மேல்வீடு' என்ற சொல்லாட்சிக்குத் தேவையில்லை. 'மேல்வீடு', 'மேலவீடு' என்ற சொல்லாட்சிகளில் வேறுபாடு உண்டு. 'மேல்வீடு' மாடி யைக் குறிக்கும். 'மேலவீடு' மேற்குப் பக்கத்திலுள்ள வீட்டைச் சுட்டும்.

"வெறுமிடிய நெருநதவசி அமுதுபடை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழைவீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி யவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறிவீழ்"

வாரைப்பற்றி அருணகிரிநாதர் திருப்புகழில் குறிப்பிடுகிறார். மேற்குப்பக்கத்துள்ள வீட்டை மேலைவீடு என்று அவர் சொல்கிறார். 'மேலைவீடு' 'மேலவீடு' என்று ஒப்பாரியில் சொல்லப்படுகிறது. அறுப்புக்கோட்டை, புதுக்கோட்டை ஆகிய ஊர்கள் பட்டுத்துணிகளுக்குப் பேர்போனவை என்ற செய்தியும் நமக்குக் கிடைக்கிறது. கணவன்தானே மனைவிக்கு அதிகாரி? இல்லத்தில் கோலோச்சுபவன் கணவன். மனையாளானாலும் கணவனுடைய ஆட்சிக்கு உட்பட்டவள் என்று தெரிவித்துக்கொள்கிறாள். 'ஆக்கி', 'பொங்கி' என்ற சொற்கள் 'சமைத்து' என்று இங்குப் பொருள்படும். கணவனைப் 'புண்ணியர்' என்று சொல்வதை 'நற்குணம் வாய்ந்தவன்' என்றும் 'மீளாப்பதம்' சேர்ந்துவிட்டான் என்றும் கொள்ளலாம். 'கோதி' என்ற சொல் நீர் இறைத்தலைக் குறிக்கும். நாட்டுப்புறமக்களின் தமிழ்மொழி வழக்காற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

———

கணிப்பொறியியல் அகராதி

ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி 12 தொகுதிகளையும் 5 துணைத் தொகுதிகளையும் ஒரு நூலடைவுத் தொகுதியையும் கொண்டிருக்கிறது. இந்தப் பதினெட்டுத் தொகுதிகளையும் அமெரிக்க நிறுவனம் ஒன்று கணிப்பொறி மூலம் தொகுத்துச் சேகரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

கணிப்பொறிவழி தொகுக்கப்படும் இந்தத் தொகுதிகளில், புதிதாக வரும் சொற்கள், சொற்பொருள் மாற்றங்கள் உரிய இடங்களில் கணிப்பொறி மூலமே சேர்க்கப்படும். திங்கள் வெளியீடாக வரும் இந்த மின்னியக்க அகராதி 1990-ன் துவக்கத்தில் அணியமாகிவிடுமாம். இதற்கு 40 நூறாயிரம் பவுன் (ஏறத்தாழ ஆறு கோடியே நாற்பது இலக்க ரூபாய்) செலவாகும்.

நன்றி : அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக்கழகம்.

தமிழ் புரிந்த தனித்துவம்

[ஆட்சிச் சொற்காவலர் கீ. இராமலிங்கனார், எம். ஏ.
''தமிழ் மணம்'' சென்னை-600 030].

தமிழ் வளர்ச்சி- பண்பாடு : இதற்கொரு புதிய அமைச்சகத் துறை (Secretariat) அமைத்திருப்பது நமது தமிழக அரசு செய்துள்ள பெரும்புரட்சி, நம் பெருந்தலைவர் மேதகு. மா. கோ. இராமச்சந்திரன் அவர்கள் தம் தண்தமிழ்ப் பாங்கினால், தமிழ் மக்களுக்கு அளித்துள்ள, இச் சித்திரைப் புத்தாண்டின் இதயம் குளிர்விக்கும் நற்பரிசு இதுவாகும்.

அரசின் கீழுள்ள பல துறைகளுக்குரிய கொள்கைகளை வகுத்து வழங்கப் பல அமைச்சகங்கள் (Ministries) உண்டு. அமைச்சர் பெருமக்களின் கருத்தின்படி செயலாற்றப் பல செயலாளர்கள் (Secretaries) இருக்கின்றனர். 'அமைச்சர்' என்னும் சொல் மந்திரியைக் குறிக்கும். அதே சொல் 'செயலாளரை'யும் குறிக்கும். எனவே, அமைச்சர்கள் செயலாளர்களின் துணை கொண்டு ஆட்சி புரிந்து வரும் அலுவலகத்தை அமைச்சகம் (Secretariat) என்கிறோம். அரசின் உச்ச நிறுவனம் இது.

அரசுத் துறைகள் பலவற்றில், மொழி பெயர்ப்புத் துறை, 'தமிழ் வளர்ச்சித் துறை', பழங்கலைத்துறை, அகர முதலித்துறை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், பண்பாட்டுத்துறை, இயலிசை நாடக மன்றம், ஓவியக்குழு, சிற்பக் கல்லூரி, இசைக் கல்லூரி ஆகிய துறைகளும் பலவாண்டுகளாக இருக்கின்றன. உலகத் தமிழ்ச் சங்கமும் விரைவில் இத் துறையின் முயற்சியினால் மலரவுள்ளது.

இந்நாளில், தமிழ் பலவகையில் வளர்ச்சியுற்றுள்ளது. என்றாலும், தமிழ்ப் பண்பாடு நிறைந்த மனிதனாகத் தமிழன் வாழ்கின்றான் என்று சொல்வதற்கில்லை. உலக மக்கள் ஒருவருக்கொருவர் கருத்தறிந்துகொள்வதற்குத் திட்டமிடும் நினைப்பை உதறித்தள்ளிவிட்டு மனிதப் பண்புடன் வாழ்வதற்கு வகை செய்வதே, உலகத்தின் மிகப்பழம் பண்பாடான தமிழ்ப் பண்பாட்டின் குறிக்கோளாகும். பண்போடு வாழ வழிகாட்டும் தமிழ்க் கொள்கைகளை, நம் மக்கள் கடைப்பிடிக்கவும், உலகம் ஏற்று மனம் மாறவும், ஆவன யாவும் புரிவதற்கு இன்னும் சில துறைகளையும் உருவாக்க வேண்டிவரும்.

இவ்வனைத்துத் துறைகளையும், ஒருங்கிணைத்துத் தமிழ்ப் பண்பு விளங்கும் தகை சான்ற நோக்கத்துடன் அமைக்கப்பெற்றிருப்பதே, தமிழ் வளர்ச்சி—பண்பாடு அமைச்சகம் ஆகும். எதிலும் புரட்சி மனம்பூண்டு இயங்கும் நம் அரும்பெறல் முதல்வர் பெருமானாரின் அரும்படைப்பிது.

'நாடறிந்த நடராசனைத்' தவிர, வேறு எவரையும், இவ் அமைச்சகத்தின் செயலாளராக அமர்த்தியிருந்தால், இவ்வளவு பொருத்தமாக இருந்திருக்காது. டாக்டர் ஒளவை. து. நடராசன், எம்.ஏ.எம்.லிட்., பிஎச்.டி., டி.லிட்., அவர்கள், தமிழ்மொழி, வரலாறு, பண்பாடு முதலியவற்றிற்கு ஒரு பலதுறைப் பண்டகம் (Super Market). இவைபற்றி எந்தச் செய்தியையும் எந்த நேரத் திலும் இரு மொழியிலும் எடுத்தியம்பும் ஆற்றல்மிக்கவர்; தமிழ்ப் பண்பாட்டின் திருவடிவம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, என் உழுவலன்பின் உடன் பிறந்தாரென நான் போற்றிவந்த, முதுபெருந்தமிழ்ச் சான்றோர், உரை வேந்தர் திருமிகு ஒளவை சு. துரைசாமிப்பிள்ளையவர்களின் முதல் திருமகனார் எனக்கும் அரும் மகனாரென இயங்குபவர்.

இவரை இவ்வரிய பணிக்குத் தேர்ந்திருப்பது எனக்குத் தனி வகையானதொரு மனநிறைவை யளிக்கிறது. முதல்வர் பெருந் தகையாரின் முழு நம்பிக்கைக்கும் உரியவரென இச் செல்வத் திருவினார், இப்புது அமைச்சகத்தின் புகழ் எங்கெங்கும் மணம் கமழ்ந்து பெரும்பயன் விளையுமாறு பணியாற்றிவர இறைவன் அருள் புரிய இறைஞ்சுகிறேன்.

நமது தவத்தின்தகு பயனாக நமக்கு வாய்த்துள்ள நம் தமிழக அரசு நீடு நிலவுக! அதனை உலகம் போற்ற இனிது இயக்கிக் கொண்டு, இந்தப் புது அமைச்சகத்தை அமைக்கும் அரும்பெருஞ் செயலைப் புரிந்துள்ள மாண்புமிகு புரட்சித்தலைவர் பெருமானார், பொன்மனச் செம்மலார் பல நலங்களுடன் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி வணங்குவோமாக!

நாகர்கோயில் சைவசித்தாந்தப் பெருமன்றம் 78வது ஆண்டு நிறைவு விழா

ஏப்ரல் 27, 28, 29ஆம் நாள்களில் சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் 78ஆம் ஆண்டு நிறைவு விழா, நாகர் கோயில் ஏ. எஸ். தங்கவேல் திருமண மண்டபத்தில் திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சைவ இளைஞர் மாநாட்டிற்கு நெல்லை திரு. தி. சு. மணி பி.ஏ., அவர்களும், சைவ மங்கையர் மாநாட்டிற்குக் குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் செல்வி எஸ். பாகீரதி அம்மை யார், எம்.ஏ., எம்.லிட். அவர்களும் தலைமை தாங்கினர். திரு. என். கணேசன் சிவநெறிக்கொடியினை ஏற்றிவைத்தார். அம்பாசமுத்திரம் திரு. சிவ. ராம, அ. நடராச முதலியார் மாநாட்டினைத் தொடங்கி வைத்துத் தொடக்க உரையாற்றினார். அறிஞர் பலர் சொற்பொழி வாற்றினர். கலைமாமணி தருமபுரம் பி. சாமிநாதன் குழுவினரின் திருமுறை இசையரங்கும் சிறப்பாக நடைபெற்றது.

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகளும் தமிழும்

[திரு. பி. இராமநாதன் எம். ஏ., பி. எல். சென்னை.]

ஆஸ்திரேலியாவை ஐரோப்பியர்கள் முதலில் கி. பி. 1770இல் கண்டுபிடித்தனர். இந்தியாவைப் போல மூன்று மடங்கு பரப்புள்ள அந் நாட்டின் மொத்த மக்கள் தொகை இப்பொழுது 2 கோடி. ஏறத்தாழ அவர்கள் அனைவரும் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் அங்குக் குடியேறியுள்ள ஐரோப்பியர்களேயாவர். ஏறத்தாழ ஓர் இலக்கம் பேர் மட்டுமே பழங்குடி மக்கள் உள்ளனர்.

வெள்ளையர் அக் கண்டத்தில் நுழைந்த காலத்தில் இருந்த பழங்குடி மக்கள் எண்ணிக்கை 3 இலக்கம் ஆகும். வெள்ளையர்களால் விரட்டி வேட்டையாடிக் கொல்லப்பட்டும் அவர்களிடமிருந்து பரவிய தொற்று நோய்களால் மாண்டும் பழங்குடியினர் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து கி. பி. 1960க்குள் 50,000 ஆகிவிட்டது. கடந்த 25 ஆண்டுகளுக்குள் ஓரளவு அவர்கள் எண்ணிக்கை அதிகரித்து இப்பொழுது ஓர் இலக்கத்தை எட்டியுள்ளது.

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் முன்னோர் ஏறத்தாழ கி. மு. 30000 வாக்கில் இந்தோனேசியத் தீவுகளான டிமோர்; செலிபீஸ் ஆகியவற்றின் வழியாக ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்திருக்க வேண்டும் என்று அறிஞர்களால்[1] கருதப்படுகிறது. அக்காலத்தில் கடல்மட்டமானது உலகெங்கும் தற்பொழுதுள்ளதைவிட ஏறத்தாழ 400 அடியிலிருந்து 600 அடிவரை குறைவாக இருந்தது. நிலப்பரப்புகள் அதிகமாக இருந்தன. ஆஸ்திரேலியாவின் நிலப் பரப்பும் இப்பொழுதைவிட ஏழில் ஒரு பங்கு அதிகமாக இருந்தது. ஆஸ்திரேலியாவுக்கும் அதற்கு வடக்கே நியூகினிக்கும் நடுவே இப்பொழுது கடலாக இருக்கும் பகுதி அப்பொழுது நிலமாகவே இருந்தது. இந்தோனேசியத் தீவுகளான டிமோர் முதலியவற்றிலிருந்து கட்டு மரம் போன்றவற்றில் சில மணி நேரத்தில் அக்காலத்தில் ஆஸ்திரேலியாவை அடைய முடிந்திருக்கும். அவ்வாறுதான் முதலில்

---

1. "The Pre-history of Australia"—D. J. Mulvaney (Thames and Hudson, London; 1969; pp. 276)

"Triumph of the Nomads—A history of Ancient Australia" —Geoffrey Blainey (Macmillan; Australia; 1975; pp. 285)

மனிதன் ஏறத்தாழ 30000 ஆண்டுகளுக்கு முன் ஆஸ்திரேலியாவை அடைந்திருக்க வேண்டும். நுழைந்து ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்குள் ஆஸ்திரேலியா முழுவதும் பரவியிருக்க வேண்டும்.

கடல்மட்டம் படிப்படியாக உயர்ந்துகொண்டுவந்து கி. மு. 15000க்குள் ஏறத்தாழ 200 அடி உயர்ந்துவிட்டது. பின்னர் கி. மு. 6000லிருந்து கி. மு. 4000க்குள் கடல்மட்டம் மேலும் கிடுகிடுவென உயர்ந்து ஏறத்தாழத் தற்போதைய நிலையை அடைந்துவிட்டது. ஆஸ்திரேலியாவும் தனிக் கண்டம் ஆனது. இவ்வாறு கடல்மட்ட உயர்வுகள் நிகழ்ந்தபோது தமிழகத்தைச் சார்ந்த நிலப்பகுதிகள் இந்துமாக்கடலுள் மூழ்கியதனையே பண்டைத் தமிழிலக்கியங்களில் உள்ள கடல்கோள் செய்திகள் குறிக்கின்றன எனலாம்.



ஆஸ்திரேலியப் பழங்குடி இனத்தவர்

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் அனைவரும் ஒரே இனத்தவர் என்பது ஒரு சாரார் கொள்கை. மூன்று இனத்தவர் என்பது மற்றொரு சாரார் கொள்கை. வட ஆஸ்திரேலியாப் பகுதிகளில் வாழும் "கார்பென்டாரியன் இனம் ;" தென் பகுதிகளில் வாழும் "மர்ரே" இனம்; டாஸ்மேனியாத் தீவில் முன்னர் வாழ்ந்துவந்த "டாஸ்மேனிய" இனம் ஆகியவையே அம் மூன்று இனங்கள்.

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள்—குறிப்பாக ''கார்பென்டாரியன்'' இனத்தவர்கள் தோற்றத்தில் முற்றிலும் தமிழர்களைப் போன்றே இருப்பார்கள்.[1] தமிழர்களைப் போன்றே அவர்களும் அத்தை மகளைத் திருமணம் செய்யும் ''முறைப் பெண்'' மணமுறையைக் கடைப்பிடிப்பவர்கள். ஏறத்தாழ இருபதாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தனிமைப்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தால் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் பண்டு பேசிய மொழி ''ஒன்று பலவாகி'' இப்பொழுது 200க்கு மேற்பட்ட மொழிகளாக (கிளை மொழிகள்—dialects—என்பதே பொருத்தம்) ஆகியுள்ளது. அப் பழங்குடி மக்கள் பயன்படுத்தும் ''பூமெராங்'' என்னும் கருவியானது இன்றும் தமிழகத்தில் புதுக் கோட்டைப் பகுதியில் உள்ள ''வளைதடி'' தான்.

அம் மக்களுடைய மொழிகள் திராவிட (தமிழ்) மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்ற கருத்தை கால்டுவெல் உள்ளிட்ட அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். மாற்றுக் கொள்கையினரும் உண்டு; ஆயினும் அவர்களுள் பெரும்பாலோர் தமிழை அறியாதவர்கள். ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களை விவரிக்கும் சில நூல்களில் கண்டுள்ள பழங்குடி மக்கள் மொழிகளில் அடங்கிய சொற்களுள் தமிழுடன் தொடர்புடைய சிலவற்றைக் காண்போம்:

ஞாம் புல = என் கண்
ஞுங்கு புல = உன் கண்
அம் புல = அவன் கண்
ஞிங்ஙு புல = அவள் கண்
இஞ்ஞா = இவன்
இஞே = உவன்
அவன் = ஈரு
ஞாரெண்டு = நீயும் நானும் (உளப்பாட்டுப் பன்மை)
ஆரெண்டு = அவனும் நானும்
ஞுஞ்ஞா = தாய்
இறைய = தந்தை
இளையரு = இளைஞர்

---

1. 'We, the aborigines'' by Douglas Lockwood cassell; Australia; 1963; pp. 259.

பக்கம் 42:—All Australian aborigines are supposed to be descended from Dravidians who migrated about 15000 years ago from India and Ceylon.

பள நாளி = பழங்காலம்

மன்ரே = மன்று

பூய் (Bui) = போ

கலம் = கட்டுமரம்

உஞ்ஞான்குரு = ஆறு தோன்றும் இடம்

உமிஞ்ஞாங்குரு = ஆறு கடலில் சேரும் இடம்

ஆன் மா நின்னின் இஞ்ஞூர நோங்கு = மகிழ்ச்சி, உன்னை இங்கே பார்க்க

யாள் வோங்க = யார் சொன்னது.

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகளைப்பற்றி அண்மையில் வெளிவந்துள்ள சில நூல்களின் விவரங்களை [1] அடிக் குறிப்பில் காணலாம். தமிழறிஞர்கள் மேலும் ஒளி தருவார்களாக. இம் மொழிகள் விரைவாக அழிந்து வருகின்றன. முற்றிலும் அழியுமுன் தமிழாய்வாளர் சிலர் ஆஸ்திரேலியா சென்று அப் பழங்குடி மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டு தமிழின் தொன்மையையும் சிறப்பையும் நிலைநாட்ட வகைசெய்வது தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் போன்றவற்றின் கடமையாகும்.

---

1. "The languages of Australia" by R. M. W. Dixon Cambridge University Press ; 1980 பக்கங்கள் xxii; 547;

Handbook of Australian languages I Edition;

R M W Dixon and Barry J. Blake:

Canberra; Australian National University Press; 1979 பக்கங்கள் xviii ; 390.

———

"தமிழ் உறவு" இலக்கிய மன்றத் தொடக்க விழா

சென்னை வியாசர்பாடி பாரதி நகர் தலைமைச் சாலை 369ஆம் எண்ணுள்ள இல்லத்தில் 7—4—84 மாலை 'தமிழ் உறவு' இலக்கிய மன்றத் தொடக்க விழா டாக்டர் கவிஞர் ஏர்வாடி எஸ். இராதாகிருட்டிணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழறிஞர் உ. சாலமோன் வரவேற்புரை நிகழ்த்தினார். மன்ற அமைப்பாளர் பா. ரா. நாகராசன் அவர்கள் சார்பாக, தமிழ்த் தொண்டர் திரு. கோ. முத்துப்பிள்ளை அவர்கள் டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் அவர்கட்கும் புலவர் பொன்னரசன் அவர்கட்கும் பரிசுகள் வழங்கினார். வழக்கறிஞர் எஸ். வரதாச்சாரியார், புலவர் பொன்னரசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். திரு. நாகராசன் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

அப்பர் பாடிய ஆறை வடதளி

[டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ.]

(முன் இதழ் ௩௧௮ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பர் கண்டபோது ஆறைவடதளி கண்டிப்பாகச் சிவத்தலமாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் முன்பே கண்டபடி சம்பந்தரும் ஆறைவடதளியை, அப்பர் கண்டு மகிழ்வதற்குச் சற்று முன்போ, அல்லது கண்டு மகிழ்ந்ததற்குச் சற்றுப் பின்போ தரிசித்துப் பாடியிருக்கிறார் என்று பெரியபுராணம் கூறுகிறது. மேலும் அப்பர் ஆறைவடதளியைத் தம் இரண்டாம் பயணத்தில் கண்டபோது அது சிவத்தலமாக இல்லாதிருந்திருப்பின், மூன்றாவது பயணத்தில் தொடங்கிய அறப்போரை அப்பர் இரண்டாவது பயணத்திலேயே தொடங்கியிருப்பார்.

அப்பர், சம்பந்தர் காலம் சமணத்துக்கும் சைவத்துக்கும் போர் நிகழ்ந்த காலமாகும். இதைச் சமயப் புரட்சிகளின் காலமாக வரலாற்றாய்வாளர்கள் குறிக்கிறார்கள். மூன்று நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் மிகப் பரந்துபட்ட அளவில் பரவிக்கொண்டிருந்த சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் முடிவுகட்ட வேண்டுமென்ற நோக்கில் சமயகுரவர்கள் சைவ வைணவக் கோட்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டுசென்று எளிதாக்கி உலவவிட்ட காலமது. சம்பந்தர் வரலாறும், அப்பரின் வரலாறுமே இதற்குச் சான்றுகளாய் அமையும். தமிழகமெங்கும் சமயப் போர்கள் நிகழ்ந்த அக் காலத்தில் பழையாறை மட்டும் விதிவிலக்காய் இருந்திருக்க முடியாது. பழையாறைக்கு மிக அண்மையில் உள்ள குடவாசலில் சமணப் பள்ளிகள் இருந்தமைக்கான கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன.[7] இதைக்கொண்டு பார்க்கும்போது பழையாறையிலும் சமணர்கள் முனைப்பாகத் தங்கள் சமயத்தைப் பரப்புவதிலும், பள்ளிகளை அமைப்பதிலும் ஈடுபட்டிருந்தமை இயல்பானதே.

புதிதாகப் பள்ளி கட்டுவது எளிதானதன்று என்பதனால் இருந்த சிவத்தலங்களைப் பள்ளிகளாக அவர்கள் மாற்றியிருக்கலாம் என்பதும் நடைமுறை சாத்தியமே. இதற்கும் சான்றுகள் நிறையவே உள்ளன. இப்போதும்கூட பல்லாவரம் மகேந்திரன் குடைவரை

---

7. குடவாயிற் கோட்டம், குடவாயில் பாலசுப்பிரமணியன், பக். 47, 48.

முகமதியர் தலமாக மாறியுள்ளதைக் காணலாம்.[8] பழையாறை வடதளிக்கோயில் அங்கிருந்த சமணர்களால் பயன்படுத்திக் கொள்ளப்பட்டு நாளடைவில் பள்ளியாக்கப்பட்டிருக்கலாம்.

பொதுமக்கள் எந்தக் காலத்தில் எதை எதிர்த்தார்கள்? பெண்ணொருத்தியை, நட்டநடு வீதியில் கொடியவன் ஒருவன் கைப் பிடித்து இழுத்துச்செல்வதைப் பார்த்தபிறகும், பெட்டைப் புலம்பல் புலம்பியபடி நெட்டை மரங்களாய் நின்றிருந்தவர்கள்தாமே இந்த மதிப்புக்குரிய பொதுமக்கள்! கொடுமைகளைக் கண்டு பொங்கியெழும் வீரம், எப்போதோ மலரும் குறிஞ்சி மலரைப்போல மிகமிக அருமையாகத்தானே பொதுமக்களுக்குத் தோன்றியுள்ளது? இது வரலாறு காட்டும் உண்மையல்லவா? சங்க காலத்தோடு செத்து மடிந்துவிட்ட வீரந்தானே நம்முடையது! அதனால்தான் தங்கள் ஊரிலுள்ள சிவத்தலம் சமணர் பள்ளியாக வடிவெடுத்தும் மக்கள் அலட்டிக்கொள்ளவில்லை. பழையாறையை அப்போது ஆண்டுகொண்டிருந்த மன்னன் பல்லவப் பேராட்சிக்கு உட்பட்ட ஒரு சிற்றரசனாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆறை வடதளியைச் சமணர்கள் பள்ளியாக்கிய செய்தி அவனுக்குத் தெரியாமல் போயிருக்கலாம். சேக்கிழாரின் பாடல்வரிகளும் இக் கருத்துக்கே வலிமை சேர்க்கின்றன. மன்னன் கனவில் தோன்றும் கடவுள் தாம் இருக்கும் கோயிலை அவன் அறிவதற்கு அடையாளக் குறிகள் காட்டுவதாகச் சேக்கிழார் பாடியுள்ளார். இதுவொன்றே அம் மன்னன் ஆறை வடதளி குறித்து ஏதும் அறியாதவனாய் இருந்தான் என்பதை மெய்ப்பிக்கப் போதுமானது. ஒரு மன்னன் இப்படி இருக்கலாமா என்று சிலர் கேட்கலாம். பேராட்சிக்கு அடிமைப்பட்ட நிலையில், எத்தனையோ துன்பங்களைச் சமாளிக்கவேண்டிய நிலையில், ஒரு மன்னன் இதுபோல் செய்திகளில் கவனம் செலுத்தாமல் விட்டிருத்தல் இயலக்கூடியதே.

இனி, கடைசிக் கேள்விக்கு வருவோம். கழகம் பதிப்பித்துள்ள பெரியபுராண வசனத்தில், 'அன்றிரவு அரசன் கனவிலே அந்தி வண்ணனார் எழுந்தருளிச் சமணரால் மறைக்கப்பெற்றுத் தாம் இருக்கும் இடத்தைக் குறிப்பிட்டு எடுத்துவந்து வடதளியிலே அமைக்கக் கட்டளையிட்டார். அரசன் விழித்தெழுந்து, அமைச்சருடன் அங்குச் சென்று, சிவலிங்கத்தை எடுத்துவந்து, வடதளியிலே அமைத்து, வழிபாட்டுக்கு வேண்டிய பொருட்களையும் செல்வத்தையும் அமைத்தான்' என்று புலவர் அரசு அவர்களால் பொருள் விளக்கம்

8. பல்லவர் வரலாறு, டாக்டர் மா. இராசமாணிக்கனார், பக். 97.

செய்யப்பட்டுள்ளது.[9] இதன்படி பார்த்தால் சமணர்கள் ஆறை வடதளியைப் பள்ளியாக்கியபோது, அதனுள் இருந்த சிவலிங்கத்தை அகற்றி வேறெங்கோ கொண்டுபோய் மறைத்து வைத்தாற் போலவும், இச் செய்தியைச் சிவபெருமான் சொல்லி, அரசன் சென்று, சிவலிங் கத்தைக் கண்டுபிடித்து, மீட்டும் கொணர்ந்து, வடதளியில் வைத்த தாகவும் பொருளாகிறது. ஆனல் திருத்தொண்டர் புராணத்தில் எந்த ஓர் இடத்திலும் இதுபோல் கருத்தமைந்த பாடல்வரிகள் இல்லே.

"அறிவில் அமணர் நமைமறைப்ப
இருந்தோம்" என் றங்(கு) அடையாளக்
குறிகள் அருளிச் செய்தருளி,
"நம்மை அரசு கும்பிடுவான்
நெறியில் அமணர் தமையழித்து
நீக்கிப் போக்கு."[10]

இதுதான் சேக்கிழாரின் பாடல். இதில் எந்த இடத்தில் சிவ பெருமான் தம்மை எடுத்துவந்து வடதளியிலே மீண்டும் வைக்கச் சொல்வதுபோல் பாடல்வரிகள் அமைந்துள்ளன? 'அறிவில்லாத அமணர்கள் நம்முடைய கோயிலே மறைப்ப நாம் இருந்தோம்' என்று கூறி, அவ்வாறு மறைக்கப்பட்ட கோயிலேக் காண அடையாளக் குறிகள் காட்டி, சமணர்களே ஒழிக்க இறைவன் வேண்டுவதாகத் தானே பாடல் அமைந்துள்ளது ?

"கண்ட வியப்பு மந்திரிகட்(கு)
இயம்பிக் கூடக் கடிதெய்தி
அண்டர் பெருமான் அருள்செய்த
அடையா ளத்தின் வழிகண்டு
குண்டர் செய்த வஞ்சனையைக்
குறித்து வேந்தன் குலவுபெருந்
தொண்டர் தம்மை அடிவணங்கித்
தொக்க அமணர் தூரறுத்தான்"[11]

---

9. பெரியபுராண வசனம், புலவர் அரசு, கழகப் பதிப்பு, பக். 162.

10. திருத்தொண்டர் புராண உரை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், பக். 492, பாடல் எண். 1562.

11. திருத்தொண்டர் புராண உரை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், பக். 492, பாடல் எண். 1563.

"ஆனை யினத்திற் றுகைப்புண்ட
அமண்ஆ யிரமும் மாய்ந்ததற்பின்
மேன்மை அரசன் ஈசர்க்கு
விமானம் ஆக்கி விளக்கியபின்."[12]

இவ் வரிகளில் எந்த இடத்திலாவது அரசன் சிவலிங்கத்தைக் கண்டு பிடித்ததாகவோ, எடுத்துவந்து மீண்டும் அமைத்ததாகவோ, கூறப் பட்டுள்ளதா என்ருல் இல்லை.

நடந்தது இதுதான். தம்கோயில் சமணர்களால் மறைக்கப் பட்டுள்ளதை இறைவன் அரசனிடம் கூறி, அமணர்களை அகற்றித் தம் கோயிலை வெளிப்படுத்தச் சொல்கிருர். தாமிருக்கும் கோயிலை யடைய மன்னனுக்கு அடையாளம் காட்டுகிருர். மன்னன் விழித் தெழுந்து அமைச்சர்களிடம் கனவினைக் கூறி, அடையாள வழி கோயிலையடைந்து, சமணர்தம் கொடுமையைக் கண்டு மனம் கொதித்து, அவர்களை அழித்து, அக் கோயிலின் பொய்கொள் விமானத்தை மாற்றி, அதைச் சிவபெருமானுக்குரிய விமான மாக்கினுன். நடந்தவை இப்படியிருக்க, பெரியபுராண வசனத்தில் சேக்கிழார் பாடாத சில கருத்துகளைச் சேர்த்திருப்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

அப்பரால் பாடப்பட்ட, சமணர்களின் பிடியிலிருந்து காப்பாற்றப் பட்ட ஆறைவடதளி ஒரு மாடக்கோயிலாகும். கோயிலுக்கு முன்னுல் இருக்கும் கோபுரம் அழிந்து, அடித்தளம் மட்டும், 'இப்போது விழுவேன், அப்போது விழுவேன்' என்ற நிலையில் அச்சுறுத்திக்கொண்டு, இத் தளத்தின் முத்தாய்ப்பாய் நின்றுகொண் டிருக்கிறது. இத் தளத்தின் எஞ்சியிருக்கும் பகுதிகளின் வேலைப் பாடு, இது ஒரு காலத்தில் எழில்மிக்க ஐந்துநிலைக் கோபுரமாய் இருந்திருக்கக்கூடும் என்பதைக் கூறுது கூறிக்கொண்டிருக்கிறது.

இக் கோபுரத்தை ஒட்டி இருந்திருக்க வேண்டிய வெளிச்சுற்றுத் திருமதில் மொத்தமாய் அழிந்து சுவடற்றுப் போயிருக்கும் கொடுமை கண்களில் நீரை வரவழைக்கிறது. உள் நுழைந்ததும், மையக் கோயில் எழிலார்ந்த மாடக்கோயிலாய்க் கண்களில் படமாகின்றது. இதன் வெளித்திருச்சுற்று முழுவதும் புதர்கள் காடாய் மண்டி யுள்ளன. செடிகளும் குப்பைகளும், மண்ணில் புதையுண்ட இலிங்கத் திருமேனிகளும், உடைந்த நந்தி வடிவங்களும் இவ்விடத்தை மனிதப் போக்குவரவு குறைந்ததோர் இடமாய்க் காட்டுகின்றன. அகழ் வாராய்ச்சிக்கு ஏற்ற இடம். எத்தனையோ வரலாற்றுப் புதையல்களை, அகழ்வோருக்கு, இவ்விடம் வாரி வழங்கக்கூடும்.

---

12. திருத்தொண்டர் புராண உரை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், பக். 492, பாடல் எண். 1564.

மையக்கோயிலின் கீழ்ப்புற மதிலின் தெற்குப்புறச்சுவரில் எழுவர் நங்கையர் சிற்பங்கள் தொடராகச் செதுக்கப்பட்டுள்ளன. மிகவும் பிற்பட்ட காலத்தில் இவை உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்குப்பார்த்த நிலையில் அமைந்த இக் கோயிலுக்குள் நுழைய, தெற்குநோக்கி அமைந்திருக்கும் படிகளில் ஏறிச் செல்ல வேண்டும். பதினாறு படிகள் உள்ள இப் பகுதியில், மேற்கு மதில்சுவரின் இடப் புறத்தில் அமர்நீதி நாயனார், அவர்தம் துணைவியார் வடிவங்களும், அதையடுத்து வீணையேந்தியவராய்த் தென்திசைக் கடவுள் வடிவமும் காணப்படுகின்றன.

'வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர்', என்ற நூலை எழுதிய திரு. வே. மகாதேவன் இவ் வடிவங்களை 'முனிவர் திருவுருவம், அதிகார நந்தியின் அழகுருவம்' என்றெல்லாம் தவறாகக் குறித்திருக்கிறார்.[13]

இக் கோயிலின் வாயில் தெற்குப்புறத்தில் அமைந்துள்ளது. இவ் வாயில் வழியே மகாமண்டபத்துள் நுழைந்ததும், எதிரில் வடக்குப்புறத்தில், தெற்குப்பார்த்த நிலையில் இரண்டு திருமுன்கள் அமைந்துள்ளன. வாயிலுக்கு நேரே உள்ள திருமுன்னில் இறைவி, அருள்மிகு விமலநாயகியாய் எழுந்தருளியுள்ளார். அடுத்துள்ள திருமுன் வெறுமையாக உள்ளது. தென்மேற்கு மூலையிலும் ஓர் அறை வெறுமையாக உள்ளது. மண்டபத்தின் வடமேற்கு மூலையில் அமர்நீதி நாயனார் தம் துணைவியுடன் காணப்படுகிறார். பழையாறை அமர்நீதி நாயனாரின் பிறப்புத் தலமென்பதால், ஆறை வடதளியில் அவரது திருவுருவம் தனிச்சிறப்புடன் நிறுவப்பட்டுள்ளது போலும். அமர்நீதி நாயனார் இறையருளால் கயிலைபுகுந்த திருநல்லூர் மணவழகர் கோயிலிலும் இதுபோன்ற சிற்பவடிவங்கள் சிறப்புடன் நிறுவப்பட்டுள்ளமை இங்கு நினைவுகூரத்தகுந்தது.

(தொடரும்)

13. வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர், திரு. வே. மகாதேவன், பக். 45.

முனைவர் ச. தண்டபாணி தேசிகர் வாழ்க!

முதுபெரும் புலவரும், தருமபுர ஆதீனப் புலவராக இருந்து 'திருக்குறள் உரை வளம்' என்னும் அரிய உரைத் தொகுப்பினையும் மேலும் பல அரிய தமிழ்ப் படைப்புகளையும் தமிழகத்திற்கு வழங்கிய வருமான ச. தண்டபாணி தேசிகர் அவர்கட்குத் தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகம் முனைவர் (டாக்டர்) பட்டம் வழங்கிச் சிறப்பித்துள் ளமை அறிந்து கழிபேருவகை அடைகிறோம். தக்க அறிஞர்க்குத் தக்க பட்டத்தினை வழங்கிச் சிறப்பித்த தமிழக அரசினைப் பாராட்டு கிறோம். வாழ்க முனைவர் தண்டபாணி தேசிகர்!

ஆசிரியருக்குக் கடிதம் :

சேக்கிழாரடிகளுக்கு நினைவாலயம்

தமிழக அரசு சிறந்த முறையில் தலைசிறந்த தமிழ்மறைக் காவலர் திருவள்ளுவப் பெருமானருக்கு நம் தலைநகர் சென்னையில் வள்ளுவர் கோட்டம் நிறுவியது. அடுத்து கவிச் சக்ரவர்த்தி கம்பர் பெருமானுக்கு அவர் பிறந்த தேரழுந்தூரில் கம்பர் கோட்டம் பன்னிரண்டு லட்சரூபா செலவில் அமைக்கத் தொடங்கியுள்ளது. இவை இரண்டும் மிகமிகப் பாராட்டத்தக்க நன்றியுள்ள நற்பணிகளாகும்.

அடுத்து நம் செந்தமிழ் மாமன்னர் சேக்கிழார் பெருமானுக்கு அவர் பிறந்த குன்றத்தூரில் சேக்கிழார் நினைவுக் கோட்டம் அமைக்க நம் தமிழக அரசு முற்படவேண்டும். இது மிகமிக இன்றியமையாத தமிழ் மறைமொழித் தொண்டாகும்.

ஏனென்றால் தெய்வச் சேக்கிழாரடிகள் சிறந்த சிவனடியார்கள் அறுபத்துமூவர் தெய்வீக வரலாற்றை உலகம் உணர்ந்து வணங்கி வழிபட்டு சிவபெருமான் திருவருளைப் பெற்றுய்ய வழிகாட்டிய பெரியபுராணம் செய்தருளிய பெருந்தகையாவார்.

காலத்தால் முற்பட்டதும்—காலவரலாற்றில் கரந்து மறந்து புதைபட்டுக்கிடந்த அடியார்கள் வரலாற்றை. அம்பலவாணப் பெருமானும் ஆண்டவன் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுக்கப் பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடப்பெற்ற பனுவலாகும்.

இது ஆண்டவன்—அநபாய சோழ மன்னன் முதல் பேரறிஞர் மேதைகள், தமிழ் இலக்கிய உலகம் வரையில் ஏற்றுக்கொண்ட உண்மையாகும்.

மேலும் முன்னாள் முதலமைச்சர் உயர்திரு. எம். பக்தவச்சலம் அவர்கள் முன்னிலையில்; தற்கால நடமாடும் தெய்வமாம் தமிழறிஞர் மேதை சரஸ்வதிகடாட்சம் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள் தலைமையில் சென்ற சில மாதங்கட்கு முன்னர் குன்றத்தூரில் தெய்வச் சேக்கிழாரடிகள் நினைவாலயத் திருப்பணி தொடங்கப்பட்டு நிதியுதவியின்றி நின்று கிடக்கின்றது.

ஆகவே, தமிழக அரசினர் அடுத்து முனைந்துவந்து தமிழ்க் காவிய இலக்கிய தெய்வ வரலாற்றுச் சிற்பி சேக்கிழாரடிகட்கும் மூன்றுவது கோட்டமாகக் குன்றத்தூரில் ஏறக்தாழப் பத்து லட்ச ரூபா செலவிலாயினும் சிறப்பாக அமைத்துத் தமிழ் கூறும் நல்லுலக மக்கள் மகிழும்படி செய்யவேண்டும். வரலாற்றுப் புகழேட்டில் இடம்பெற்றிட வகைசெய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள

வேலூர் 28—8—84

மு. பெருமாள்,
செயலாளர்
வேலூர் வள்ளிமணாளர் திருப்புகழ்ப் பாராயணச் சங்கம்.

பயன்மிக்க, பழைய சில பட்டிமண்டப நிகழ்ச்சிகள்*

[ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.]

முன்னுரை:

பட்டிமண்டபம் என்பது, ஒரு பேரவையில், தக்க அறிஞர்கள் தம் கருத்துகளை எடுத்துக்கூறி, ஏனைய அறிஞர்கள் தொடுக்கும் வினாக்களுக்கு விடையளித்துச், சொற்போர் புரிந்து, மெய்ப்பித்து நிலைநிறுவும் இடம் ஆகும். இது 'வித்தியா மண்டபம்' எனவும் வழங்கப்பெறும். இடத்தின் பெயர், அங்கு நிகழ்கின்ற நிகழ்ச்சியையும் குறிப்பதாயிற்று. பட்டிமண்டபம் பற்றிய குறிப்புகள், ''மருத நன்னாட்டு வாய்வாள் வேந்தன், பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்'' என்று சிலப்பதிகாரம், ''ஒட்டிய சமயத்து உறு பொருள் வாதிகள், பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்'' என்று மணிமேகலை, ''பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை. எட்டினோடு இரண்டும் அறியே னையே'' என்று திருவாசகம் ஆகிய தமிழிலக்கியங்களில், இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கூறப்பெற்றுள்ளன.

''தவலரும் தொல்கேள்வித் தன்மை யுடையார்,
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ,
நகலின் இனிதாயிற் காண்பாம்; அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி''

எனவரும் நாலடியார் செய்யுளில், பட்டிமண்டப நிகழ்ச்சிகளால் விளையும் பயனும், இன்பமும் விதந்தெடுத்துக் கூறப்பெற்றிருத்தல் காண்கின்றோம்.

கம்பரும், பட்டிமண்டபமும்:

கவியரசராகிய கம்பர், தமது இராமகாதையில், அயோத்திமா நகரில் இருந்த பலவகை மண்டபங்களைப் பற்றிக் குறிப்பிடுங்கால்,

''மன்னவர் தருதிறை அளக்கும் மண்டபம்,
அன்னமென் நடையவர் ஆடும் மண்டபம்,

---

* தேரழுந்தூரில் நடைபெற்ற கம்பர் கோட்டக் கால்கோள் விழாவில், பட்டிமண்டப நிகழ்ச்சியினைத் தொடங்கிவைத்து, ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது (18-3-84).

> உன்னரும் அருமறை ஓதும் மண்டபம்,
> பன்னரும் கலைதெரி பட்டி மண்டபம்''

என்னும் பாடலில், அயோத்தியிற் பட்டிமண்டபங்கள் பல அமைந் திருந்தனவாகப் பாடியிருக்கின்றார்.

அம்மட்டோ! தமது இராமகாதையில், பட்டிமண்டபங்கள் போன்ற பல நிகழ்ச்சிகளைத் தாமே அழகுறப் படைத்து மொழிந்தும் இருக்கின்றார். சிறப்பாக, 'இராவணன் மந்திரப் படலம்' என்னும் பகுதியில், அவனது தலைமையில், அனுமன் இலங்கையைத் தீக் கொளுவிச் சென்றதன்பின், இனி யாது செய்யலாம்? என்பது பற்றிய ஒரு பட்டிமண்டபம் நிகழ்ந்தது போலவும், அதன்கண் படைத்தலைவர்கள் -மகோதரன் -வச்சிரதந்தன் -தும்முகன் -மாபெரும் பக்கன் -பிசாசன் -கும்பகருணன் -இந்திரசித்து -விபீடணன் ஆகி யோர் கலந்துகொள்வது போலவும் அழகுறப் பாடியுள்ளார்.

இங்ஙனமே, 'அடைக்கலப் படலம்' என்னும் பகுதியில், விபீடணனை ஏற்பதா? மறுப்பதா? என்பதுபற்றி இராமபிரான் தலைமையில், ஓர் ஆலோசனைக் கூட்டம் நிகழ்ந்ததாகவும், அதன்கண் சுக்கிரீவன்-சாம்பவான்-நீலன் - அனுமன் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியதாகவும், சுவைதுளும்பப் பாடியிருக்கின்றார்.

இத்தகைய நிலையில், 'பட்டிமண்டபம்' என்று பெயர் பெறுவிடி னும், பட்டிமண்டபம் போன்று அறிஞர்களிடையே சென்ற நூற்றாண் டின் இறுதியிலும், இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆக, ஏறத் தாழ நூறு (100) ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற, பயன் மிக்க பழைய பட்டிமண்டபக் கருத்தரங்க நிகழ்ச்சிகள் சிலவற்றை, இங்குக் குறிப்பிட்டு, இந் நிகழ்ச்சியினைத் தொடங்கி வைக்கலாம் எனக் கருதுகின்றேன்.

தீர்த்தப் பிரகாசிகை :

இராமநாதபுரம் சேதுபதி அரசர்கள் அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியைப் பல்லாற்றானும் போற்றி வளர்தத பெருஞ் சிறப் புக்கு உரியவர்கள். அவர்கள் பலருள் சிவஞானதேவர் அவர்களின் புதல்வராகிய பொன்னுசாமித்தேவர் அவர்கள் (1863), யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் அவர்களுக்குப் பெருஞ்சிறப்புகள் செய்து, பொருளுத விகள் புரிந்து, அவரைக் கொண்டு, திருக்குறள் பரிமேலழகர் உரை -திருக்கோவையார் பேராசிரியர் உரை - தருக்க சங்கிரக அன்னம் பட்டீய உரை -சேதுபுராணம் முதலிய பல நூல்களைப் பதிப்பிக்கச் செய்த பெருமைக்கு உரியவர்.

அவர்களுக்குப் பின் வந்த பாஸ்கர சேதுபதி அவர்கள் (1897) நமது சமயத்திற்கும் தமிழுக்கும் அரும்பெரும் தொண்டாற்றியவர். சுவாமி விவேகானந்தர் அமெரிக்க நாடு சென்று, அனைத்துலகச் சமய மாநாட்டுப் பேரவையில், இந்து சமயத்தின் சார்பாளராகச் செல்லுவதற்குரிய வழிவகைகளைச் செய்தவர்களுள், திரு. பாஸ்கர சேதுபதி அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இராமேசுவரம் திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலராக இருந்துவந்த அவர்கள், அங்கேயே அவ்வப்போது சிலகாலம் தங்கியிருந்து, அருள்மிகு இராமநாத சுவாமியை வழிபட்டு வருவது வழக்கம். இராமேசுவரத்திற்கு நாள்தோறும் பல நாடுகளிலிருந்து எத்தனையோ பலப்பல துறவிகள் வருவர். ஒருநாள் பாஸ்கரசேதுபதி அவர்கள், கட்டிளங்காளைப் பருவமுடைய அழகிய சிறந்த துறவி ஒருவரைக் கோயிலிற் கண்டார். ஏனைய துறவிகள் எவரிடத்தும் இல்லாத ஒரு பெரும் தெய்வீகக் கவர்ச்சி, அவர்பால் இருந்தது. அதனால் ஈர்க்கப்பெற்று, அவரை எதிர்கொண்டு சென்று, அவர்பாற் பெரிதும் அன்பும் பணிவும் காட்டி, அளவளாவி மகிழ்ந்து, அவரைத் தம் விருந்தினராகச் சிலகாலம் தங்கியிருக்கச் செய்து போற்றி மகிழ்ந்தார் (1898).

அவர்தாம் சுவாமி விவேகானந்தர்! இராமேசுவரத்தில் திரு. பாஸ்கரசேதுபதி அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சுவாமி விவேகானந்தர் தங்கியிருந்த புனிதநிலையம், கோயிலுக்கு அருகில் கிழக்குச் சந்நிதி வீதியில் இன்றும் இருக்கக் காணலாம். அங்கு நாள்தோறும் மாலை வேளைகளில், பாஸ்கரசேதுபதி அவர்கள் தலைமையில், அரசவைப் புலவர்கள் கூடிக் கலந்து உரையாடி மகிழ்வர். அந்தச் சிறந்த அரசவையில் பலமொழிகளும், பல கலைகளும் வல்ல பேரறிஞர்கள் பலர், இடம் பெற்றிருந்தனர்.

ஒருநாள் சுவாமி விவேகானந்தர் அவர்கள், அப் பேரவையில் பகவத்கீதையைப்பற்றி, அரியதொரு விரிவுரை நிகழ்த்தினர். சுவாமிகள் சங்கரரின் அத்துவைதக் கொள்கையினை விளக்கினர். ஏனைய பிற அறிஞர்கள் விசிட்டாத்துவைதம், துவைதம் ஆகிய கொள்கைகளை ஒட்டிக் கீதைப் பேருரைகள் ஆற்றி மகிழ்வித்தனர். இறுதியாக, அவ் அரசவைப் புலவர்களில் முதன்மையானவரும், 'மும்மொழிப் புலமை வேந்தர்' ஆகிய அருட்டிரு மறைமலை அடிகளாரின் ஞானாசிரியரும் ஆகிய, சென்னைச் சூளை சோமசுந்தர நாயகர் அவர்கள், நன்றியுரை நவின்றார். அவ் உரையின்கண் அவர் தமக்குரிய சைவசித்தாந்த தத்துவக் கொள்கையினைத் தழுவி, கீதையின் சிறப்பினைச் சுருங்கக்கூறித் திறம்பட விளக்கினர்.

சிவத்திரு சோமசுந்தரநாயகர், தமிழ் ஆங்கிலம் வடமொழி தெலுங்கு முதலிய பல மொழிகளில் வல்லவர்; வேதாந்தம் சித்தாங்

தம் சைவம் வைணவம் ஆகிய பலதுறை நூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர்; சொல்வன்மை மிக்கவர்; அக்காலத்தில் சென்னை மாநகராட்சியின் அலுவலகத்தில், ஒரு பிரிவுக்கு உயர் அலுவலராக இருந்து பணிபுரிந்தவர்; அதனால் அவருக்கு நல்ல ஆங்கிலப் புலமையும் அமைந்திருந்தது. சுவாமிகளின் பொருட்டு, அவர் தமது நன்றியுரையை ஆங்கிலத்திலேயே நிகழ்த்தினார். இடையிடையே வடமொழி மேற்கோள்களையும், சிறப்பாகவும் மிகப் பொருத்தமாகவும் எடுத்துக்காட்டித் தம் கருத்துகளைத் தெளிவுபடுத்தி, வலியுறுத்தினார். அவரது வடமொழிப் புலமையும், ஆங்கில மொழியறிவும், சொற்பெருக்காற்றும் திறனும், சுவாமிகளின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.

தமிழகத்தில் சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை என்பதொன்று நிலவி வருவதையும், அம் மரபுநெறியைத் தழுவிக் கீதைக்கு எத்தகைய விளக்கங்கள் கூற இயலும் என்பதையும், சுவாமி விவேகானந்தர் பெரிதும் உணர்ந்து மகிழ்ந்து பாராட்டினார். அதன் பயனாகச் சிவத்திரு. சோமசுந்தரநாயகர் அவர்கள், அருள் நந்தி சிவாச்சாரியார் கீதையை ஓரளவு புறக்கணித்து இருப்பினும், மாதவச் சிவஞான சுவாமிகள், தமது சிவஞான போதப் பேருரையில் கீதையை எடுத்துக்காட்டிப் போற்றியிருப்பதைத் தழுவிச், சைவ சித்தாந்தத் தத்துவச் செந்நெறியின் மரபு நெறிக்கு ஏற்பக் "கீதார்த்தப் பிரகாசிகை" என்று ஒரு நூலை எழுதி வெளியிட்டார். சைவசித்தாந்த தத்துவச் சிந்தனை உலகில், அஃது ஒரு சிறப்பு மிக்க திருப்புமுனையாகும் என்று கூறலாம். "கீதார்த்தப் பிரகாசிகை" என்பது, நாயகர் அவர்கள் வெளியிட்டுள்ள நூற்பெயர்களின் பட்டியலில் இடம்பெற்றுக் காணப்பெறுகிறது. ஆயினும், அந்தோ! அந்நூல் இப்பொழுது கிடைக்கப் பெறுகின்றிலது. எனினும், இந்நிகழ்ச்சி, மிக்க பெரும் சிறப்பு வாய்ந்ததாகும்.

(2) ஆகுபெயர், அன்மொழித்தொகை:

பாஸ்கரசேதுபதி மன்னர் அவர்களுக்குப் பின்னர், பாண்டித்துரைத் தேவர் அவர்கள், தமிழ்மொழியை வளர்ப்பதில் தலைசிறந்து விளங்கினார். மதுரையில் இன்றுள்ள நான்காம் தமிழ்ச் சங்கத்தை 1905ஆம் ஆண்டில் நிறுவியவர், பாண்டித்துரைத் தேவரேயாவர். அச் சங்கத்திற் பெரும்புலவர்கள் பலர் உறுப்பினராகத் திகழ்ந்தனர். திங்கள்தோறும் ஆய்வுக்கூட்டங்கள் சிறப்புற நிகழ்ந்தன. ஆண்டுதோறும் மாநாடுகளும் விழாக்களும் மாண்புறத் தொடர்ந்து நடைபெற்று வந்தன. பலப்பல அரிய பெரிய நூல்கள் ஆராய்ந்து பதிப்பித்து வெளியிடப்பெற்றன. அரிய நூல்களைப் பதிப்பிப்பவர்களுக்கும்,

ஆய்வு நூல்களை எழுதுபவர்களுக்கும், பாண்டித்துரைத் தேவர் பரிசில்களும் பொருளுதவிகளும் வரையாது வழங்கிப் பெரிதும் உதவி புரிந்தார். அவர் தம் தலைமையிலும் முன்னிலையிலும் பட்டிமண்டபம் போன்று, பல அரிய ஆராய்ச்சியுரைகளும், கருத்துப்பூசல்களும் நிகழும். அவற்றுள், 'ஆகுபெயர்-அன்மொழித்தொகை' பற்றிய கருத்தாய்வுப் பூசலும் ஒன்றாகும்.

தமிழ்மொழி இலக்கண வளத்திற் சிறந்தது. ''கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து, பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை, மண்ணிடைச் சில இலக்கண வரம்பு இலா மொழிபோல், எண்ணிடப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ?'' என்று பரஞ்சோதி முனிவர், தமிழ்மொழியின் இலக்கண வளம் குறித்துப் புகழ்ந்து பாடியிருக்கின்றார். அத்தகைய தமிழ் இலக்கணத்தில் 'ஆகுபெயர்-அன்மொழித்தொகை' என்னும் குறியீடுகள், மிக்க சிறப்பும் முதன்மையும் உடையவை. எனினும், இவ்விரண்டிற்கும் இடைத்தெரிவின்றி, அறிஞர்களுக்கிடையே பல ஐயப்பாடுகளும் குழப்பங்களும் நிகழ்தல் உண்டு.

திருக்குறட் காமத்துப்பாலில் ''அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ? கனங்குழை; மாதர்கொல் மாலும்என்நெஞ்சு'' என்னும் குறளில் வரும், கனங்குழை என்பது ஆகுபெயர் என்றார் பரிமேலழகர். சிவஞான சுவாமிகள் 'இலக்கண விளக்கச் சூறாவளி'யில், அதனை மறுத்து அன்மொழித்தொகை என்றார். 'அருந்திறல் பிரிந்த அயோத்தி போல' என்னும் சிலப்பதிகார வரியில், 'அருந்திறல்' என்பது, 'அன்மொழித்தொகை-ஆகுபெயர்' என்றார் அடியார்க்கு நல்லார்.

சோழவந்தான் அரசஞ்சண்முகனார், பரிமேலழகர் ஆகுபெயர் என்றது பிழை என்று எழுதினார். யாழ்ப்பாணம் திரு. சி. கணேச ஐயர், பரிமேலழகர் எழுதியது சரியே என்று மறுத்தார். வேறுபல அறிஞர்களும் இவ் வழக்கீட்டிற் கலந்துகொண்டு, பற்பல வகைகளில் தம் கருத்துகளைத் தெரிவித்தனர். இக் கருத்துகளையெல்லாம் ஒருங்கு ஆராய்ந்து முடிவு கூறுமாறு, பாண்டித்துரைத் தேவர், அருட்டிரு மறைமலை அடிகளாரை வேண்டிக்கொண்டார்.

''ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் தம்முட் பெரிதும் இயைபு உண்டு. தம்பொருள் உணர்த்தாமல், பிறிதுபொருள் உணர்த்துதல் வகையான், இரண்டும் தம்முள் ஒக்கும். எனினும், இரண்டினையும் பொதுவாகப் பின்வருமாறு பகுத்துணர்ந்து கொள்ள லாம். ஆகுபெயர் நியதிப் பெயராகவே வரும். அன்மொழித் தொகையோ, செய்யுள் இயற்றுவோன் ஒருவரை வியப்பு முதலிய

வற்ருல, தன் கூற்ருயும் பிறர் புணேந்துரைப்புழிப் போதரும். ஆகு பெயர் ஒன்றன் பெயரால், அதனேடு இயைபுபற்றிய பிறிதொன் றனே யுணர்த்தி ஒருமொழிக்கண்ணதாக வரும். அன்மொழித் தொகையோ, இயைபு வேண்டாது இருமொழியும் தொக்க தொகை யாற்றலாற், பிறிதுபொருள் உணர்த்தி இருமொழிக்கண்ணதாக வரும். வேற்றுமை வினே பண்பு உவமை உம்மை என்னும் ஐவகைத் தொகை நிலேத தொடர் மொழிகளின் புறத்தே, அவையல்லாத பிற மொழிகளாகிய உருபுகள் தொக வருவது அன்மொழித்தொகை எனப்படும்'' என்று, அடிகளார் முடிபான தெளிவுரை வழங்கினர். தமிழிலக்கணமும், அதன்கண் 'ஆகுபெயர்-அன்மொழித்தொகை' என்னும் குறியீடுகளும் உள்ளவரையில், இம் மறுப்பியல் ஆராய்ச்சித் தெளிவு முடிபுரைக் கருத்துரைகள் பலவும், அறிஞர் உலகில் நின்று நிலவி, பயன்படும் என்பது திண்ணம்.

(தொடரும்)

குறளாயம் (KURALISTIC SOCIETY)

''எல்லார்க்கும் எல்லாம்'' என்ற அறநெறிப்பட்ட சமுதாயத் திட்டத்தைக் குறளியம் வகுத்தளிக்கிறது. அது காட்டும் அரசியல், பொருளியல், சமுதாயவியல், மெய்யுணர்வு ஏனேய அறிவியல்கள் ஆகியவற்றின் அடிப்படைக் கருத்துக்களின்படி குறளாயம் அமைவுறும்.

குறளியத்தின் அடிப்படைக் கருத்துக்களுக்கேற்பக் குறளாயக் குறிக்கோள்களேச் செயற்படுத்துவதற்குத் தக்க நடைமுறைக் கொள்கைகளே வகுத்தும், அக் கொள்கைகளின் அடிப்படையில் ஓர் அமைப்பை நிறுவியும், அவ்வமைப்பின் உறுப்புக்களே உண்டாக்கி யும் அவற்றில் பங்கேற்றுப் பணிபுரியும் பல நிலேப்படும் குறளியலாளர் களுக்குரிய விதிமுறைகளே வரையறுத்தும், மேலும் தக்கனவற்றைத் தக்காங்கு சேர்த்து வகுத்தும் குறளியத் திட்டத்தை அமைத்து முறையாக நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

குறளியமே வாழ்வு நெறி! குறளியமே ஆட்சி நெறி!
புதியதோர் குறளாய உலகு படைப்போம்!
எழுதுங்கள்; பேசுங்கள்; உறவாடுங்கள்.
உறுதி கொள்வோம்! உறவு கொள்வோம்!
உலவும் தி. பி. 2015 உலகில் குறளாயம் பிறக்கும் ஆண்டு!

விவரம் கிடைக்கும் முகவரி:-

ஆசிரியர், நெறியாளர் 'குறளியம்'
அ. பெ. எண்: 2 ஈரோடு-638 001.

தொழிலதிபர் ஈசுவர ஐயர் மறைவு

'ஈசன் எஞ்சினீயரிங் கம்பெனி' 'மெட்ராஸ் மோட்டார்ஸ்' 'ராயல் என்பீல்டு' மற்றும் பல தொழில் நிறுவனங்களை எண்ணூர், திருவொற்றியூர் ஆகியவிடங்களில் நிறுவி, திறம்பட நடத்திவந்த புகழ்பெற்ற தொழிலதிபர், உயர்திரு ஈசுவர ஐயர் அவர்கள் கடந்த 24—4—84 அன்று, தமது 75ஆம் அகவையில், சென்னையில் இறையடி சேர்ந்தார்கள் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்து கிறோம். மறைந்த இந்திய அரசியல் தலைவர்களுள் காந்தீய வழி வந்த திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் திரு ஐயர் அவர் களின் நெருங்கிய நண்பராவார். திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் சென்னை வரும்போதெல்லாம் நம் ஈசுவர ஐயர் அவர்களின் இல்லத் தில் தான் தங்குவாராம்.

திரு ஐயர் அவர்கள் இந்திய மொழிகள் சிலவற்றையும், அயல் நாட்டு மொழிகள் சிலவற்றையும் நன்கு பயின்றிருந்தார். பல்வேறு வணிகக் கழகங்களிலும், அறநிலையங்களிலும் இவர் தொடர்பு கொண்டிருந்தார்.

மின்சாரக் கருவிகள், பலவற்றை உண்டுபண்ணுவதில் இவருடைய நிறுவனங்கள் சிறந்து விளங்கியதோடு, அவற்றை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வந்தன. படைத்துறை, காவல் துறை ஆகியவற்றுக்குத் தேவையான 'புல்லட்' எனப்படும் மிதி உந்துகளை உண்டுபண்ணுவதில் இவரது 'என்பீல்டு' சிறந்து விளங்கிற்று.

ஐயர் அவர்கள் தொழில் தொடர்பாக வெளிநாடுகள் பலவற் றிற்குச் சென்று வந்தார். இவர் சிறந்த இறை பற்றுளர். பொது மக்கள் நலங்கருதித் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி போன்ற சமய நூல்களினின்று அரிய பாடல்களைத் தொகுத்து அச்சிட்டு வழங்கினார்.

இவருக்கு நான்கு ஆண் மக்களும், நான்கு பெண் மக்களும் உள்ளனர். ஓய்வு பெற்ற ஐ. ஏ. எஸ். அதிகாரி திரு. சங்கரன் அவர்கள் இவர்தம் மருமகனுவார் என்பது குறிப்பிடத்தக்கது. மறைந்த ஐயர் அவர்களின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

———

செய்திகள்

குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளியின் 16-வது ஆண்டுவிழா

கழக அறநிலையங்களுள் ஒன்ருகிய, நெல்லைக் குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளியின் 16-வது ஆண்டுவிழா 31-3-84இல் அருள்மிகு நெல்லையப்பர் கோயில் நின்றசீர் நெடுமாறன் மன்றத்தில் நடைபெற்றது. நெல்லை மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி, திரு. மு. துரைராஜ் பி,ஏ., பி.டி., அவர்கள் விழாவிற்குத் தலைமை



தாங்கிப் பள்ளியின் பொறுப்பாளர்களையும், கழகத்தையும் பாராட்டிய தோடு கல்வியோடு, பண்பும் ஒழுக்கமும் போற்றப்பட வேண்டியதன் இன்றியமையாமைகளை விளக்கிப் பேசினர். காவல்துறை ஆய்வாளரின் துணைவியார் திருமதி மரகதம் அண்ணுமலைச்சாமி மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினர். இவ் விழாவினையொட்டிக் கதம்ப நிகழ்ச்சிகளும் ஓரங்க நாடகமும் நடைபெற்றன.

தமிழவேள் உமாமகேசுவரனர், நாவலர் ந. மு. வே. நாட்டார் நூற்ருண்டு விழாக்கள்

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் முறையே ஏப்ரல் 21, 22ஆம் நாள்களில் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில் தமிழவேள் உமாமகேசுவரனர், நாவலர் ந. மு. வே. நாட்டார் ஆகியோரின் நூற்ருண்டு விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் விழாவினைத் தொடங்கிவைத்தார். முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் விழாவிற்குத் தலைமைதாங்கினர். மாண்புமிகு அமைச்சர் கா. காளிமுத்து அவர்கள் தமிழவேள் நூற்றுண்டு நினைவுக் கட்டடத்தைத் திறந்துவைத்தார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. ஐ. சுப்பிரமணியம், கவிஞர் சுரதா ஆகியோர் முறையே கருத்தரங்கிற்கும் கவியரங்கிற்கும் தலைமைதாங்கினர். மாண்புமிகு அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் நிறைவு விழாவிற்குத் தலைமை தாங்கினர். தவத்திரு குன்றக்குடி அடிகளார், டாக்டர் வ. சுப. மாணிக்கம் ஆகியோர் பேருரை ஆற்றினர். மாண்புமிகு அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் நிறைவுரைக்குப்பின் திரு. ஆ. மணி அவர்கள் நன்றிநவில விழா இனிது நிறைவுற்றது.

புரட்சிப் பாவேந்தர் விழா

கோவை மாவட்டப் பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில் 6—5—84இல் கோவை ஆர். எஸ். புரம் மாநகராட்சிக் கலையரங்கில், திரு. கு. வெ. கி ஆசான், க மு., ச இ. அவர்கள் தலைமையில் புரட்சிப் பாவேந்தர் விழா நடைபெற்றது. செந்தலை திரு கவுதமன், க. மு., கல். இ. வரவேற்புரை ஆற்றினர். திரு. விடுதலை விரும்பி, க. இ. தொடக்கவுரை ஆற்றினர். திருவாளர்கள் படுகை நெடுஞ்செழியன், மதுரை தமிழரசன், அருள் மொழி, சக்குபாய், இராசேந்திரன், இராசியண்ணன் ஆகிய அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். பிற்பகல் கருத்தரங்கில் முனைவர் தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமை தாங்கப் புலவர் தென்மொழி ஞானபண்டிதன் வரவேற்புரை நிகழ்த்த அறிஞர் பலர் அரிய உரையாற்றினர். அடுத்து புலவர் சா. மருதவாணர் வரவேற்புரை நிகழ்த்த, தமிழர் தளபதி கீ. வீரமணி அவர்கள் தலைமை தாங்க, விழா மலரைத் திருமதி சுப்பு லட்சுமி செகதீசன் வெளியிட்டார். முனைவர் நன்னன், காசி ஆனந்தன், மு. கண்ணப்பன், கி. இராமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர். வழக்கறிஞர் ப. பத்மநாபன் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ருஅ. ருருஎ ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5	00
கயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5	00
திரு. A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5	00
திருமுருக விசாக நம்பி அவர்கள்	5	00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5	00
மீரா அற நிறுவனம், சென்னை-40	50	00
எஸ். வி. பெரியசாமி, சென்னை-14 (மணிவிழா நன்கொடை)	51	00

மதிப்புரை

இக்காலத் தமிழ் மரபு

[ஆசிரியர்: டாக்டர் கு. பரமசிவம், அன்னம் (பி) லிமிடெட், 2, சிவன் கோயில் தெற்குத் தெரு, சிவகங்கை-623560. பக்கங்கள் 296, விலை: உரு. 30-00.]

கல்விக் கழகு கசடற மொழிதல் என்பர். அங்ஙனம் கசடற மொழிதற்கும், எழுதுதற்கும் இலக்கணக் கல்வி இன்றியமையாதது. இலக்கணக் கல்வி என்பது பண்டைய மொழி இலக்கணங்களை மட்டும் பயில்வதோடு அமைவதன்று. வளர்ந்து வரும் இக்காலத் தமிழ் மரபினைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளுதலும் மிகமிக வேண்டற்பாலது. இத் தேவையினை உணர்ந்து காலநிலைக்கேற்ற இலக்கண அமைப்பினை 'இக் காலத் தமிழ் மரபு' என்னும் நூலாக உருவாக்கியுள்ளார் இந் நூலாசிரியர். முதற்கண் தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமையினை விளக்கிப் பின்னர் எழுத்து, சொல் இவைபற்றிய விளக்கந் தந்து, வேற்றுமைகள், மாற்றுப் பெயர்கள், பெயரடை, வினை வகைகள், காலம், வினைப் பொருண்மை, வினையடை, சில ஒட்டுக்கள் என்று முறையே விளக்கிச் செல்லும் பாங்கும், படிப்போர் உளத்தில் பதியுமாறு ஆங்காங்கே தக்க மேற்கோள்கள் தந்திருப்பதும் ஆசிரியரின் இலக்கண அறிவுத் தெளிவினை நன்கு விளக்குகின்றன. மாணவர்களும் நல்ல தமிழ் பேச எழுத விழையும் தமிழ் அன்பர்களும் படித்துப் பயன் பெற வேண்டிய அரிய இலக்கணப் படைப்பு இது எனில் மிகையன்று.

தமிழ் இடப்பெயராய்வு

[ஆசிரியர்: டாக்டர் கி. நாச்சிமுத்து, எம்.ஏ., பிஎச்.டி., சோபிதம் பதிப்பகம், நாகர் கோயில்-629 001, பக்கங்கள் 213 + 20. விலை: உரு. 24.]

பல ஊர்களின் பெயர்களையும், இடங்களின் பெயர்களையும் நாடோறும் நாம் வழங்குகின்றோம். ஆனால் அப் பெயர்களின் பின்னால் பொதிந்து கிடக்கும் காரணங்களை அறிகின்றோமில்லை. அவற்றை நூல்களின் வாயிலாகவோ, பட்டறிவாளர் வாயிலாகவோ அறிகின்றபோது நமக்கோர் இன்பம் பிறக்கிறது. ஒரு வரலாற்றினை அறிந்துகொண்டோம் என்ற மன நிறைவு ஏற்படுகிறது. இங்ஙனம் இடப்பெயர்களை ஆராய்வதை அறிஞர் பெருமக்கள் ஒரு கலையாகவே கருதி அவ்வாய்வில் ஈடுபட்டனர். டாக்டர் சேதுப் பிள்ளை அவர்களின் 'ஊரும் பேரும்' என்ற நூல் இதற்கோர் எடுத்துக்காட்டு. அவரைப் பின்பற்றிப் பலர் இத்தகைய இடப் பெயராய்வினை மேற்கொண்டனர். டாக்டர் கி. நாச்சிமுத்து அவர்களின் இத் 'தமிழ்

இடப்பெயராய்வு இத் துறையில் பரந்து விரிந்த ஓர் ஆய்வு நூலாகும். முன்னர் கொங்கு நாட்டு இடப் பெயர்களை ஆராயத் தொடங்கிய இவ்வாசிரியர், அதன் விளைவாக மேற்கொண்ட பெருமுயற்சியே இந் நூலினை உருவாக்கக் காரணமாயிற்று. இடப் பெயராய்வு இத் துணைப் பெரிய அளவிலும், புள்ளி விவரங்களோடும் இதுகாறும் ஆய்வுநூல் வெளி வந்ததில்லை எனலாம்.

தமிழர் அளவைகள்

[ஆசிரியர்: டாக்டர் கே. பக்வதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி. டி. டி. ஐ. தரமணி, சென்னை-600 113, பக்கங்கள் 148+IV, விலை: உரு. 8-00.]

தமிழினத்தின் அறிவாற்றல்களைப்பற்றி ஆராய்வதில் இந்நாள் ஆராய்ச்சியாளர்கள் முனைந்து நிற்கின்றனர். தமிழர் பண்பாடு, வாழ்க்கை முறை, இலக்கியம், கலை இன்ன பிற பற்றியெல்லாம் ஆய்வு செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஈண்டுத் தமிழரின் அளவை முறைகள்பற்றியும் ஆராய்ந்து இந்நூலை வெளியிட்டிருக்கின்றது. அளவைகள் எண்ணல், முகத்தல், நிறுத்தல், நீட்டல், காலம் எனப் பலவகைப்படும். இவை பண்டுதொட்டுத் தமிழரால் எப்படியெப்படிக் கையாளப் பட்டு வந்துள்ளன என்பதை விளக்குமுகத்தான், தமிழர் எதையும் எண்ணி அளந்து, முறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி வாழ்ந்த சிறப் பினை இந்நூல் விளக்குகின்றது. இதற்குப் பண்டை இலக்கியங் களினின்று அகப்புறச் சான்றுகளை ஆங்காங்கே எடுத்துக் காட்டு கிறார் இந் நூலாசிரியர். நூலின் இறுதியில் அளவைத் தொடர்பான தமிழர் எண்ணங்கள் என்னும் தலைப்பில் காணப்படும் பழமொழிகள் படித்து இன்புறத் தக்கவை. ஆசிரியரின் முயற்சி பாராட்டத் தக்கது.

சைவசித்தாந்தம்

[ஆசிரியர்: ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல், சேக்கிழார் பதிப்பகம், 8-ஏ, சந்நிதித் தெரு, வட திருநாகேசுரம், குன்றத்தூர், சென்னை-69, விலை: உரு. 30-00.].

கடவுள்—உலகு—உயிர் என்னும் முப்பெரும் உண்மைப் பொருள் களை விளக்கி அறிவுக்குத் தெளிவை அளிப்பதும், எல்லாரும் ஒப்புக் கொள்ளக்கூடிய அறிவியல் அடிப்படையில் அமைந்திருப்பதும் சைவசித்தாந்தமாகும். இது தமிழர்கள் தனிப்பெரும் சமய உண்மை. இதனை அடிப்படையாக வைத்துப் பல சாத்திர நூல்கள் எழுந்துள் ளனவெனினும், சைவசித்தாந்தம் என்றால் என்ன என்பதைச் சுருக்க மாகவும் விளக்கமாகவும் கூறுகிறது இந் நூல். பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் சார்பில், தருமபுர ஆதீனத்தின் ஆதரவில் நடைபெற்ற அனைத்துலகச் சைவசித்தாந்த முதற் கருத்தரங்கு விழாவில் வெளி யிடப்பெற்ற இந்த நூலில் சித்தாந்த வித்தகர் திரு. முருகவேள்

அவர்கள் பல்வேறு மன்றங்களிலும், விழாக்களிலும் நிகழ்த்திய அரிய சொற்பொழிவுகள் இடம் பெற்றுள்ளன. சைவ சித்தாந்தம் எங்கும் பரவ ஏற்றதோர் அழகிய பதிப்பாக இந் நூல் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியரின் முயற்சியும் பாராட்டத்தக்கது.

வடிவிழந்த வள்ளுவம்?

[ஆசிரியர்: சிந்தனைச் செம்மல் கு. ச. ஆனந்தன், வணி. இ. ச. இ., சிவலிங்க நூற்பதிப்புக் கழகம், 3 மண்டபத் தெரு, ஈரோடு-638 001, விலை: உரூ. 14-00.]

நூலின் தலைப்பைக் கண்டவுடன், இப்படியும் ஒரு நூலா? ஓர் ஆய்வா? என்று கேட்கத் தோன்றும். ஆனால் இந் நூலில் உண்மையான வடிவத்தை இழந்தது மூல நூலன்று—அதன் உட்பொருளே என்பது நூலின் இதயத்தைத் திறந்து பார்ப்போர்க்கே தெரியும். திருக்குறட்பாக்கள் அத்தனையும் உருமாருதிருக்க அவற்றின் உரைகள் பிற்கால உரையாசிரியர் பலரால் திசை திருப்பப்பட்டு, வள்ளுவரின் பரந்த நோக்கங்களே பாழடிக்கப்பட்டுள்ளன என்பது இந்நூலாசிரியர் கண்ட முடிபு. இதனைத் தக்க ஏதுக்களோடு சுட்டிக்காட்டி பொதுமறை—தமிழ்மறை எனப் போற்றப்படும் திருக்குறளின் உண்மை வடிவை உலகறியச் செய்வதே ஆசிரியரின் நோக்கமாகும். 300 பக்கங்களைக் கடந்து செல்லும் இவ்வாய்வுத் திறனை விளக்கப்புகின் விரியும். எனவே அன்பர்கள் படித்துப் பயன் காண்பார்களாக.

நெஞ்சம்! மலர் நெருப்பு

[ஆசிரியர்: புலவர் மு. சு. தங்கவேலன், க. மு., கல். இ., வேலன் வெளியீடு, 391, கொல்லர் தெரு, கோவிந்தபுரம், வாணியம்பாடி (வ. ஆ)-635 751 விலை: உரூ. 5-00.]

இந் நூலின் தலைப்பினைக் கொண்டே இந் நூலாசிரியரின் உள்ளக் கிடக்கையினை ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம். பல்வேறு காலங்களில் பல்வேறு இதழ்களில் இவர் எழுதிய பாடல்களின் தொகுப்பே இந் நூல். இவர்தம் பாடல்களின்மூலம் இந் நூலாசிரியர் தொழிலாளர் முன்னேற்றம், தமிழ் மொழி—நாடு—இனம் ஆகியவற்றிடம் இவர் கொண்டிருக்கும் பற்று, பெரியார், அண்ணா ஆகியோர் வழி செல்லும் உள்ளப்பாங்கு ஆகியன தெளிவாகத் தெரிகின்றன. ஆசிரியரின் எண்ணங்களும், அவற்றை வெளியிடக் கவிதையைக் கருவியாகக் கொண்ட முயற்சியும் பாராட்டத் தக்கவை.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம் சாலை, சென்னை-108. அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிட்.

கழகப் புதிய வெளியீடுகள்

சிவஞானபோதம்—தெளிபொருள் விளக்கம் —கழக இலக்கியச் செம்மல் புலவர். இரா. இளங்குமரன்	6	00
செந்தமிழ்ச் சொல்வளம் ”	8	50
சைவமத வினவிடை—மறை. திருநாவுக்கரசு	4	50
தமிழக சிற்ப, ஓவியக் கலைகள் —டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன், எம்.ஏ., பி.எச்டி.	12	00
தமிழகக் குடைவரைக் கோயில்கள் —தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்.	11	00
புரட்சிக் கவிஞர்—முல்லை. முத்தையா	8	00
Studies in Saiva Siddhanta —J. M. Nallasamy Pillai, M.A., B.L.	65	00
The Metaphysice of Saiva Siddhanta System Prof. K. Subramania Pillai, M.A., M.L.	5	00

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்		வாழ்நாள் கையொப்பம்	
உள்நாடு	ரூ. 16/-	உள்நாடு	ரூ. 150/-
வெளிநாடு	ரூ. 30/-	வெளிநாடு	ரூ. 300/-

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை

மராட்டியர் செப்பேடுகள் (ஆங்கிலச் சுருக்கத்துடன்) —புலவர் செ. இராசு	150	00
கலித்தொகை (மறுபதிப்பு)—நச்சினார்க்கினியர் உரை —இ.வை. அனந்தராமையர் பதிப்பு நிழற்பட அச்சேற்றம்	150	00
சங்க இலக்கியக் கருத்தரங்கு கட்டுரைகள்	30	00
ஆராய்ச்சித் தொகுதி—மு. இராகவையங்கார்	100	00
தொல்-சொல்-தெய்வச்சிலையார் உரை	60	00
தொல்காப்பியம்-நன்னூல்-சொல்லதிகாரம் —க. வெள்ளைவாரணனார்	70	00
நன்னூல் காண்டிகை உரை—ஆறுமுக நாவலர் பதிப்பு	65	00

நூல்கட்குக் கழிவு 25%—அஞ்சற் செலவு தனி.
பணவிடை மூலம் அல்லது வரைவோலை மூலம்
கட்டணங்கள் அனுப்பலாம்.

விவரங்களுக்கு :

பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

பதிவு எண் : 4899 May 1984

அப்பர் அச்சகம் சென்னை-108.